# ஆண்டு அறிக்கை
# 2021-2022

# சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்
# ஆண்டு அறிக்கை 2021 – 2022

## பொருளடக்கம்


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | வாரிய இயக்குநர்கள் | 66 |
| 2. | தணிக்கையாளர்களின் அறிக்கை | 67 |
| 3. | இருப்பு நிலைக்குறிப்பு | 81 |
| | வரவு – செலவு கணக்கு | 82 |
| | பணப்புழக்க அறிக்கை | 83 |
| | நிதி ஆதாரம் மற்றும் செயல்முறை அறிக்கை | 86 |
| | அட்டவணைகள் | 87 |
| 4. | கணக்கியல் கொள்கைகள் | 95 |
| 5. | கணக்குகள் மீதான குறிப்புகள் | 99 |
| 6. | தமிழக அரசின் ஆய்வறிக்கை | 113 |
| 7. | நிதிநிலைச் சுருக்கம் – ஐந்தாண்டு ஒரு கண்ணோட்டம் | 127 |

# வாரிய இயக்குநர்கள்
# அறிக்கை காலம் 2021 – 22 (31 மார்ச் 2022 அன்று)

திரு. கே.என்.நேரு
அமைச்சர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
தலைவர்,
சென்னை குடிநீர் வாரியம்.

**முழுநேர இயக்குநர்கள்**

திரு.எஸ்.விஜயராஜ் குமார், இ.ஆ.ப.,
முதன்மை செயலாளர்/ நிர்வாக இயக்குநர்,
சென்னைக் குடிநீர் வாரியம்

திரு. பி. ஆகாஷ், இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
சென்னைக் குடிநீர் வாரியம்

திருமதி. என்.சித்ரா, பி.எஸ்சி., எம்.ஏ.,
நிதி இயக்குநர்,
சென்னைக் குடிநீர் வாரியம்

திரு. கே. மதுரைநாயகம். பி.இ.
பொறியியல் இயக்குநர்,
சென்னைக் குடிநீர் வாரியம்

**அலுவல் வழி இயக்குநர்கள்**

திரு.சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப.,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
தலைமைச் செயலகம்,

திரு.ந. முருகானந்தம், இ.ஆ.ப.,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
நிதித்துறை,
தலைமைச் செயலகம்,

திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப.,
முதன்மை செயலாளர்/ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி

திரு. அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப.,
உறுப்பினர் செயலாளர்,
சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம்

திரு. வ. தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப.,
நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

# தணிக்கையாளர்களின் தனிப்பட்ட அறிக்கை

கணேசன் மற்றும் குழுமம்
பட்டயக் கணக்குதாரர்கள்

புதிய எண்.9 (பழைய எண்.36),
தெற்கு கடற்கரை அவென்யூ,
எம்ஆர்சி நகர் மெயின் ரோடு,
சென்னை – 600 028.
தொலைபேசி: 044 – 24950547
மின் அஞ்சல்: gandco.ca@gmail.com

## தணிக்கையாளர் அறிக்கை
## சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய இயக்குநர்கள் குழுவிற்காக

### நிதி அறிக்கைகள் பற்றிய கூற்றறிக்கை

### கணக்காய்வாளரின் தகுதியான கருத்து:

சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றுவாரியத்தின் 2022ஆம் ஆண்டு மார்ச் 31ம் தேதி வரையிலான இருப்பு நிலைக்குறிப்பு, வரவுசெலவு கணக்கு, பணப்புழக்க அறிக்கை, நிதியாண்டுக்கான பொருளாதார மூலம் மற்றும் நிதி பயன்பாடு, இருப்புநிலை அறிக்கைகளுக்கான இருப்பு நிலைக்குறிப்புகள், குறிப்பிட்ட கணக்கியல் கொள்கைகளின் சுருக்கறிக்கைகள் மற்றும் இதர விளக்கவுரைகள் உள்ளிட்ட தொகுப்பான இருப்பு நிலையறிக்கையை நாங்கள் கணக்காய்வு செய்தோம்.

எங்கள் கருத்திலும், எங்கள் தகவல்களின் சிறந்தவற்றிலும், எங்களுக்கு வழங்கப்பட்ட விளக்கத்தின்படி, கீழே உள்ள தகுதி வாய்ந்த கருத்துக்கான அடிப்படையின் கீழ் விவரிக்கப்பட்டுள்ள விஷயங்களைத் தவிர, மேற்கூறிய நிதி அறிக்கைகள் தகவல்களைத் தேவையான முறையில் வழங்குகின்றன, மேலும் இந்தியாவில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான பார்வையை அளிக்கின்றன

(அ) இருப்பு நிலையறிக்கை பொருத்தமட்டில் ஆண்டிற்கான வாரியத்தின் விவகாரங்களின் நிலை, ஆண்டு 2022, மார்ச்31ம் தேதியில் முடிவடைகிறது.

(ஆ) வரவு செலவு கணக்கு பொருத்தமட்டில், ஆண்டிற்கான பற்றாக்குறை (கூடுதல் வருமானம் மற்றும் செலவுகள்) மேற்க்கூறிய தேதியில் முடிவடைகிறது.

(இ) பணப்புழக்க அறிக்கை பொருத்தமட்டில், ஆண்டிற்கான பணப்புழக்கம் மேற்க்கூறிய தேதியில் முடிவடைகிறது.

(ஈ) பொருளாதாரமூலம் மற்றும் நிதிபயன்பாட்டு அறிக்கை பொருத்தமட்டில், ஆண்டிற்கான நிதி பரிவர்த்தனைகள் மேற்க்கூறிய தேதியில் முடிவடைகிறது.

## தகுதியான தணிக்கை கருத்துக்கான அடிப்படை

### i. பின்பற்றப்படாத கணக்கியல் தரநிலை 1: தெரிவிக்கப்பட வேண்டிய கணக்கியல் கொள்கைகள்

பிரிவு அறிக்கையிடல் தொடர்பான கணக்கியல் தரநிலை பின்பற்றுதல் பொருட்டு தெரிவிக்கபட வேண்டிய கணக்கியல் கொள்கை (கணக்கியல் தரநிலை எண் 17), குத்தகைகள் (கணக்கியல் தரநிலை எண் 19) மற்றும் சொத்துக்களின் பாதிப்பு (கணக்கியல் தரநிலை எண் 28) இவைகள் குறிப்பிட்ட கணக்கியல் கொள்கைகளின் சுருக்கறிக்கைகளில், வேண்டிய முறையில், தலைப்புக்கு தகுந்த கணக்கியல் தரநிலைகளில் குறிப்பிட்டுள்ளபடி தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

### ii. பின்பற்றப்படாத கணக்கியல் தரநிலை 2: கொள்பொருள் மதிப்பீடு

மேற்க்கூறப்பட்டுள்ள தரநிலைபடி, கொள்பொருள் மதிப்பீ போது குறைவாக பயன்படுத்தப்படும் சரக்குகள்/ பயன்படா சரக்குகள்/ பயனற்ற சரக்குகள் அடையாளம் காணப்பட்டு குறிப்பிடப்படவில்லை. உபரி சரக்குகள், சரக்கு குறைப்பாடு, நிறுத்திவைக்கப்பட்டுள்ள சரக்குகள், கட்டுப்படுத்தப்பட்ட சரக்குகளின் இருப்புகள், ஈடுசெய்யப்பட்ட சரக்கு கணக்குகளுடன் சமன் செய்யப்படவில்லை மற்றும் மெய்இருப்பு சரிப்பார்ப்பு செய்து இருப்பு பதிவேடுகளுடன் பொருத்தமாக வட்டார அலுவலகங்களில் உள்ள சரக்கு பதிவேடுகள் மற்றும் தகுந்த பொது பேரேடு கணக்குகளில் உள்ள சரக்கு நிலுவைகளுக்கு இடையில் ஏதேனும் வேறுபாடுகள் மற்றும் இருப்புகள் பொருந்தும்படி ஆவணங்கள் ஒப்பிடுதல் செய்யப்படவில்லை. இதன் பாதிப்பு தற்போது மதிப்பீடு செய்ய இயலவில்லை.

### iii. பின்பற்றப்படாத கணக்கியல் தரநிலை 4: இருப்பு நிலைக்குறிப்பு தேதிக்குப் பின் நிகழும் தற்செயல்கள் மற்றும் நிகழ்வுகள்

இருப்பு நிலைக்குறிப்பு தேதிக்கு பின் கணக்குகள் மற்றும் அறிக்கையின் மேல் வேண்டிய நடவடிக்கை எடுக்க வாரியம் அங்கீகரிக்கும் தேதி வரையிலான நிகழ்வுகளை கருத்தில் கொள்ளாமை.

iv. பின்பற்றப்படாத கணக்கியல் தரநிலை 5: கணக்கு ஆண்டிற்கான நிகரலாபம் அல்லது இழப்பு, முந்தையக்கால உருப்படிகள் மற்றும் கணக்கியல் மதிப்பீட்டில் மாற்றங்கள்

நிதிநிலை அறிக்கைகளில் கணக்கிடப்பட்ட முந்தைய கணக்குக் கால உருப்படிகளை தரநிலையில் பரிந்துரைக்கப்பட்ட நெறிகளின்படி தெரிவிக்காதது. நிதியாண்டு 2021–22 க்கான நிதி அறிக்கையில் வட்டார அலுவலகங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுக்கு மீறிய செலவுகள் உட்பட செலவீனங்களுக்கான ஒதுக்கீடு வழங்கப்படவில்லை.

v.பின்பற்றப்படாத கணக்கியல் தரநிலை 10: சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள்.

கணிசமான காலத்திற்கு நிலுவையில் உள்ள சொத்துக்களின் மூலதனமாக்கல் செய்யப்படாதது மற்றும் அதன் தேய்மானத்தை வழங்காதது. கணக்கில் பரிவர்த்தனை இல்லாத மற்றும் கணிசமான காலத்திற்கு மூலதனமாக்காமல் நிலுவையிலுள்ள செயல்பாட்டிலுள்ள திட்டங்களுக்கான கணக்குகள் பொருத்தவரை தற்காலிக விகிதத்தில் 5% மதிப்பிழப்பு வழங்கியது, வாரியத்திற்கு சொந்தமான நிலங்கள் பொருத்தமட்டில் குறிப்பிட்ட நிலங்கள் இன்னும் பெயர் மாற்றம் செய்யப்படாதது மற்றும் சொந்தமான நிலங்களுக்கு மூலதனமாக்கபட்ட நிலங்களை ஒப்பிட்டு காணும்போது ஆவணங்கள் ஒப்பாமல் போவது / நில பதிவேட்டிலுள்ள நிலங்களின் மதிப்பு மற்றும் பொதுப்பேரேட்டில் உள்ள நிலங்களின் மதிப்பு ஒப்பிட்டு காணுதல், பயன்பாட்டிலுள்ள நிலங்களின் அல்லது வாரியத்தின் பெயரிலுள்ள நிலங்களின் முழுவிவரம் மற்றும் அசையா சொத்துளில் நிலங்களின் மதிப்பை வெளிப்படையாக தெரிவித்தல், தேவைப்பட்டால் பயன்பாட்டிலிருந்து விலக்கப்பட்ட சொத்துக்களை தெரிவிக்காதது மற்றும் மதிப்பு குறைப்பிற்கு சொத்துகளை மறுஆய்வு செய்யாததும், சொத்துகளின் மதிப்புக் குறைப்பிற்கு ஏற்பாடு செய்யாததும், பிற நிறுவனங்களால் அல்லது பிற அமைப்புகள் அல்லது பிற அதிகாரிகளால் நடத்தப்படும் வெளிநிதி முதலீட்டில் நடைப்பெறும் பணிகளுக்கு உரிதான தொகைகளை தெரிவிக்காதது, அசையாச் சொத்துகளின் பதிவேட்டின்படியும் பேரேட்டின்படியும் அசையாசொத்துகள் கணக்கு ஒத்துவராமை, அநேகமாக காலாவதியாகிவிட்ட காரணத்தினால் வறட்சி நிவாரண பணிகள் தலைப்பின் கீழ் வரும் அசையா சொத்துகளை தள்ளுபடி செய்யாதது, மூலதனச் சொத்துகளுக்காக கிடைக்கும் மானியங்களை அவற்றின் தேய்மானம் தொகையுடன் நிகர் செய்யாதது, சொத்து, ஆலைகள் மற்றும் உபகரணங்கள் நடப்பு பணிகளுக்கு அங்கீகார அளவுகோல்களின்படி இல்லாமல் பொது நிர்வாகத்தின் விகிதாசார

பங்கீடு மற்றும் நிர்வாக மேல்நிலையை ஒருவிகிக்கப்பட்ட சதவீதத்தில் பங்கிடப்பட்டது.

### vi. பின்பற்றப்படாத கணக்கியல் தரநிலை 9: வருவாய்அங்கீகாரம்

வரிகள் மற்றும் கட்டணங்கள் வசூலிக்கப்படுவதைத் தவிர மற்ற பரிவர்த்தனைகள் தொடர்பான வருவாயைக் கணக்கிடுதல் ரொக்க அடிப்படையில் செய்யப்படுகிறது மற்றும் உறுதிப்படுத்தபட்ட போதுமான ஆதாரத்துடன் முக்கிய தலைப்புகளின் கீழ் அல்லது வருவாய் ஆதாரங்களின் கீழ் கணக்கிடப்பட்ட வருவாய், அங்கீகரிக்கப்பட்ட வருவாயுடன் பொருந்தவில்லை. வருவாய் கணக்கியலுக்கு ஆதாரமாக பயன்படும் அடிப்படை பதிவேடு ஆவணங்களுடன் கணக்கிடப்பட்ட வருவாய் பொருந்தவில்லை. மேலும் கண்டறியப்பட்ட வருவாய்க்கும் வருவாயாண்டுக்கான அடிப்படை பதிவேடுகளுக்கும் வேறுபாடு உள்ளது.

### vii. பின்பற்றப்படாத கணக்கியல் தரநிலை 12: அரசு மானியங்கள்

மேற்கூறியுள்ள தரநிலை பரிந்துரைக்கும் முறைப்படி அரசு மானியங்களை கணக்கிடவில்லை. "அட்டவணை ஆ" – அரசு மானியங்களின் கீழ் சேர்க்கப்படுள்ள வட்டார அலுவலங்களில் காட்டப்படும் வருவாய் தொகை ரூ.117.78 கோடிகள் ஆவணங்களுடன் ஒப்பீடாகவில்லை. இவை கணிசமான காலத்திற்கு நிலுவையில் உள்ளது.

### viii. பின்பற்றப்படாத கணக்கியல் தரநிலை 15: பணியாளர் நலப்பயன்கள்

விடுப்பு தொகுப்புகள், ஓய்வு ஊதியம், பணிக்கொடை, குடும்ப நல நிதி உள்ளிட்ட ஊழியர் நலன்களுக்கான ஏற்பாடுகள் செய்யவில்லை.

### ix. பின்பற்றப்படாத கணக்கியல் தரநிலை 16: கடன் செலவுகள்

தகுதி வாய்ந்த சொத்துகளின் அடிப்படையில் மூலதனமயமாக்கலில் குறிப்பிடத் தகுந்த தாமதம் ஏற்பட்ட போதிலும், கடன் செலவினங்களின் மூலதனமயமாக்கலை நிறுத்துவது நடைமுறை படுத்த படவில்லை. மேலும் இச்சொத்துக்கள் முதலீடாகும் தேதிவரையிலான கணிசமான தாமதத்திலும் இதற்குண்டான வட்டி, பொருள்வாரியாக திட்டத்தின் சொத்துகளுக்கு பகிர்ந்தளிக்கபட்டுள்ளது.

### x. பின்பற்றப்படாத கணக்கியல் தரநிலை 17: பிரிவு அறிக்கை

வாரியத்தால் மேற்க்கொள்ளப்படும் பொறுப்பிலுள்ள நடவடிக்கைகளின் பல்வேறு பிரிவு அறிக்கை தொடர்பான தகவல்களை தெரிவிக்காமை.

xi. பின்பற்றப்படாத கணக்கியல் தரநிலை 19: குத்தகைகள்

வாரியம் எடுத்துக்கொண்ட குத்தகை பரிவர்த்தனை தொடர்பான தகவல்களை தெரிவிக்காமை.

xii. பின்பற்றப்படாத கணக்கியல் தரநிலை 28: சொத்துகளின் குறைபாடு

வாரியம், இருப்புநிலை தேதியில் தனது சொத்துகளில் ஏதும் சொத்து குறைபாடு இருக்கிறதா என்று மதிப்பிடவில்லை. ஆகையால் எங்களால் சொத்து குறைப்பாடு இருப்பது பற்றி எதுவும் குறிப்பிட இயலவில்லை.

xiii.பின்பற்றப்படாத கணக்கியல் தரநிலை 29: விதிமுறைகள், தற்செயல் கடப்பாடுகள் மற்றும் தற்செயலான சொத்துகள்.

நிலுவையில் உள்ள கடமைகளுக்கான அளவீடுகளை அங்கீகரிக்காததும் மற்றும் வெளிப்படுத்தாததும், கணக்கியல் நெறிமுறைகளின் மீறலாகவும் நம்பகத்தன்மையற்ற தகவல் வழங்கலாகவும் எண்ணப்படும்.

மேற்கூறிய தரநிலைகளை பின்பற்றாததின் ஒட்டுமொத்த விளைவு மற்றும் மேற்கூறிய தரநிலையை பின்பற்றாததின் நிதி அறிக்கைகளில் பொருளாதார தாக்கத்தை அளவிட கூடிய தேவையான தகவல்கள் தற்போது வாரியத்திடம் இல்லாததால் கீழ்பத்தியில் மற்ற தகுதிகளை அளவிட இயலவில்லை.

மேற்கண்டவற்றிற்கு அப்பாற்பட்டு, நாங்கள் பின் வரும்வற்றை அறிக்கையிடுகின்றோம்:

(அ) "அட்டவணை எ – நடப்புசொத்துகள், கடன்கள், முன்பணங்கள், வைப்புநிதிகள்" தலைப்பின் கீழ், தலைமை அலுவலகம், வட்டார அலுவலகம் மற்றும் இதர பிரிவுகளுக்கு இடையே உள்ள கணக்குகளின் நிகரபற்றுத் தொகை ரூ.231.16 கோடிகள் (முந்தைய ஆண்டு ரூ.182.97 கோடிகள்) ஒன்றிணைப்பு செய்யாத நிலை.

(ஆ) பொதுபேரேடு மற்றும் அடிப்படை பதிவேடுகளின்படி, இதர பலதரப்பட்ட கடனாளிகள் தொடர்பான தொகை ரூ.548.65 கோடிகள் (முந்தைய ஆண்டு: ரூ.521.32 கோடிகள்), இதர பலதரப்பட்ட கடனீந்தோர் தொடர்பான தொகை ரூ.465.88 கோடிகள் (முந்தைய ஆண்டு: ரூ.417.92 கோடிகள்), வைப்பு நிதிகணக்குகள், கடன்கள் தொகை ரூ.710.96 கோடிகள் (முந்தைய ஆண்டு: ரூ.627.41 கோடிகள்) கடன்கள் மற்றும் முன்பணங்கள் தொகை ரூ.98.20 கோடிகள் (முந்தைய ஆண்டு: ரூ.123.24 கோடிகள்), காப்பு வைப்புநிதிகள் தொகை/தக்கவைப்பு நிதிகள்/இதர செலுத்த வேண்டிய கணக்குகள்

தொடர்பான தொகை ரூ.1,751.90 கோடிகள் (முந்தைய ஆண்டு: ரூ.1,588.64 கோடிகள்), ஊதியப்பட்டியல் மற்றும் இதர கணக்கு தலைப்புகள் (அட்டவணை "உ" – பிற நடப்பு கடன்களின் கீழ்) தொடர்பான தொகை ரூ.445.46 கோடிகள் (முந்தைய ஆண்டு: ரூ.453.81 கோடிகள்) ஆவணங்கள் ஒன்றிணைப்பு செய்யாத நிலை. மேலும் பயன்படுத்தாத ரொக்கம் ரூ.16.10 கோடிகள் (வரவு) [முந்தைய ஆண்டு: ரூ.6.49 கோடிகள் (பற்று)], பொறுப்புகளுக்கு மீறிய சொத்துகள் தொடர்பான தொகை ரூ.21.19 கோடிகள் (முந்தைய ஆண்டு: ரூ.21.19 கோடிகள்), சொத்துகளுக்கு மீறிய பொறுப்புகள் தொகை ரூ.43.69 கோடிகள் (முந்தைய ஆண்டு: ரூ.43.69 கோடிகள்) தொடர்பான பொதுபேரேடின் கணக்கு ஒன்றிணைப்பு செய்யாத நிலை.

(இ) தொடர் முதலீட்டுப் பணிகள் (PIP) தொடர்பான துணைக்கணக்குகள் மற்றும் பொதுக்கணக்குகள் இடையே ஒப்புமை இல்லை. நிலையான சொத்துகளில், வெளிநிதி முதலீட்டில் நடைபெறும் பணிகளை சேர்க்கப்பட்டுள்ளமை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளுக்கு மாறாக உள்ளது.

(ஈ) 142 வங்கி கணக்குகள் (முந்தைய ஆண்டு – 93 வங்கி கணக்குகள்) தொடர்பான இருப்பு உறுதிப்படுத்தல்/வங்கி சமநிலை முரண்பாடு அறிக்கை, இதில் 86 வங்கி கணக்குகள் (முந்தைய ஆண்டு: 76 வங்கி கணக்குகள்) மொத்த பற்று இருப்புடன் ரூ.550.27 கோடிகள் (முந்தைய ஆண்டு: ரூ.452.22 கோடிகள்) மற்றும் 16 வங்கி கணக்குகள் (முந்தைய ஆண்டு: 14 வங்கி கணக்குகள்) மொத்த கடன் இருப்புடன் ரூ.608.63 கோடிகள் (முந்தைய ஆண்டு: ரூ.627.06 கோடிகள்) மற்றும் நிலுவை இருப்பு இல்லாத 40 வங்கி கணக்குகள் (முந்தைய ஆண்டு: 3 வங்கிகணக்குகள் நிலுவை இருப்பு இல்லை) நிலுவைகளை உள்ளடக்கிய வங்கி கணக்கு ஈடு அறிக்கை மற்றும் அட்டவணை "எ" – நடப்பு சொத்துகள், கடன்கள், முன்பணங்கள், வைப்புநிதிகள்" தலைப்பின் கீழ் இடம் பெற்றுள்ளவை இன்னும் சரிபார்க்கப்படவில்லை. குறுகியக்கால வைப்புநிதிகளுடன் மாற்றல் கணக்கு இருப்பு நிகராகவில்லை மற்றும் வங்கியின் இரொக்கம் கையாளுந்துறையின் நிலையான வைப்புநிதிகளின் இருப்பும் பேரேடுகளும் ஒத்துப்போகாதது.

(உ) கணிசமான காலவரை நிலுவையிலுள்ள வாராக்கடன்களை ஒதுக்கீடு செய்யாமை ரூ.548.65 கோடிகள் (முந்தைய ஆண்டு: ரூ.521.32 கோடிகள்).

(ஊ) வருமான மூலங்கள் குறித்த பேரேடுகளின் தலைப்புகள் சார்ந்த இருப்பு மற்றும் வருமான மூலங்களில் பிடிக்கப்படும் வரிகுறித்தும் வருமான வரி விதிகளின் கீழ்வரும் படிவம் 26AS (வருடாந்திர அறிக்கை)யும் ஒப்பிடப்படாமல் இருக்கிறது.

(எ) தண்ணீரின் அளவு/சுத்தகரிக்கப்படாத தண்ணீர்/சுத்தகரிக்கப்பட்ட தண்ணீர் என வரும் ஆண்டுகளில் விநியோகத்திற்கென அறியப்பட்ட இன்ன பிற பொருட்கள் சம்பந்தமான செலவுகளை அறிதல் மேலும் ஆண்டு இறுதிவரை இவற்றிற்கான செலவுகள் வருமானங்களோடு நிகர்செய்ய ஒத்திவைக்கப்படவில்லை.

(ஏ) வாரியத்தால் கையாளப்படும் ஒப்பந்தங்களின் (வருவாய் மற்றும் மூலதனம் ஆகிய இரண்டின்) முழுமையான களஞ்சியத்தை தொகுப்பதற்கான பொருத்தமான அமைப்பு காரணமாக விவரங்கள் கிடைக்காததால் மற்றும் ஆண்டு முடிவுகளில் செலவினங்களை திரட்டாதது மற்றும் அடுத்த ஆண்டில் பில்கள்/ரசீதுகள் பெறப்பட்ட நிதியாண்டின் இறுதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக இருப்பு நிலைக்குறிப்பு தேதியில் செலவினங்களை கணக்கிடாதது.

(ஐ) 31.03.2022 நிலவரப்படி, தமிழக அரசுக்கு நிலுவையில் உள்ள கடன் தொகை ரூ.1,522.16 கோடிகளுக்கும், நிதி நிறுவனங்களுக்கு (தமிழ்நாடு நகரவளர்ச்சி நிதியம், நீர் மற்றும் சுகாதார நிதியம் மற்றும் தமிழ்நாடு நகரப்பொருளாதார மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் தவிர) நிலுவையில் உள்ள ரூ.41.40 கோடிகளுக்கும் இருப்பு உறுதிப்படுத்தவில்லை. தமிழக அரசுக்கு நிலுவையில் உள்ள வட்டி தொகை ரூ.233.58 கோடிகளுக்கும், நிதி நிறுவனங்களுக்கு (ரூ.17.88 கோடிகளுக்கும்) உறுதிப்படுத்தாமல் உள்ளது. தமிழ்நாடு நகரப் பொருளாதார மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு கழகத்திற்கு நிலுவையில் உள்ள ரூ.1.07 கோடிகளுக்கும் இடையேயுள்ள வேறுபாடு சமன் படுத்தப்படவில்லை.

(ஓ) வருவாய் தலைப்புகளுக்கான பொதுக்கணக்குப் புத்தக இருப்புகளுடனும் மற்றும் செலுத்த வேண்டிய ஒன்றிய அரசு சரக்கு மற்றும் சேவைவரி/மாநில அரசு சரக்கு மற்றும் சேவைவரி/ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி மற்றும் மின்னணுவழி கடன் பேரேடு மற்றும் மின்னணுவழி பணப்பேரேட்டின் நிலுவைகளுடனும் தொடர்புடைய பொதுக்கணக்குப் பேரேடு தலைப்புகளுடனும் பொருந்தும் வகையில், சரக்கு மற்றும் சேவைவரி

சட்டங்களின் கீழ் சரக்கு மற்றும் சேவைவரி வருடாந்திர அறிக்கை வழங்கப்பட்ட பொருட்களுக்கு சமன் செய்யப்படாதது.

(ஓ) கணக்குப் பேரேட்டில் பதிவு செய்யப்பட்ட பதிவுகளின் கணினி மென்பொருளில் தொடர்பான தகவல்கள் உடனடியாக வழங்கும் அம்சம் இல்லாததால் உறுதி செய்யப்படவில்லை. எங்களுக்கு விளக்கப்பட்டவரை, இந்தபதிவுகள் வட்டார அலுவங்கள்/தலைமையகம்/பிற ஒன்றியகங்களில் பதிவு செய்யப்பட்டு, கணக்கியல் முறையில் பதிவு செய்யப்படாத பதிவுகளாக நிதியாண்டு 2021–22க்கு பயன்படுத்தப்பட்டன. மேலும் கணக்குகள் இறுதி செய்யப்பட்ட பிறகு பொதுக்கணக்குப் பேரேட்டைத் திறந்தவுடன், இந்த பதிவு செய்யப்படாத பதிவுகள் பொதுக்கணக்குப் பேரேட்டில் பதிவு செய்யப்பட்டன, மேலும் இந்த பதிவுகள் தொடர்பான விவரங்கள் மற்றும் நிதி அறிக்கைகளில் இருப்புகளின் மீது ஏற்படும் பாதிப்புகள் எங்கள் ஆய்வுக்கு உடனடியாக கிடைக்கவில்லை.

(ஔ) தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் மூலம் நிரந்தர வைப்புகளில் வசூலான கணக்கு சமரசம் செய்யப்படாத வட்டி ரூ.11.71 கோடிகள் தொகையை "அட்டவணை ஐ" (துணை "அட்டவணை உ" – வைப்புகள் மற்றும் முதலீடுகள்) கீழ் காட்டப்பட்டுள்ளது. இது நீண்டகாலமாக நிலுவையில் உள்ளது.

(அஅ) பகுதி/ஒன்றியம் வாரியாக கணக்கு சமரசம் செய்யப்படாத அட்டவணை எல் – (ஊழியர்களுக்கு செலவினங்கள் மற்றும் நிபந்தனைகள்) கீழ் காட்டப்பட்டிருக்கும் இருப்புத் தொகை ரூ.324.65 கோடி (முந்தைய வருடம்: ரூ.325.43 கோடி).

(அஆ)31.03.2021க்கு முன் மூலதனமாக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பான தவறான தேய்மானம் கணக்கீட்டின் திருத்தம் கணக்குப் புத்தகங்களில் இன்னும் நடைமுறைக்கு வரவில்லை.

(அஇ) 31.03.2022க்கு முன்பாக வழங்கப்பட்ட ஆனால் சமர்ப்பிக்கப்படாத/ வசூலாகாத, கடன் ஒதுக்கீடு காசோலைகளுக்கான தொகை ரூ.23.34 லட்சம் வங்கி சமன்பாட்டு அறிக்கைகளில் இன்னும் காட்டப்படுகிறது.

(அஈ) வருவாய் தலைப்புகளின் கீழ் வாடிக்கையாளர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட தொகை ரூ.87.25 கோடிகள் மற்றும் நிலையான சொத்து தலைப்புகளின் கீழ் வாரியத்தால் செலவு கணக்கிடப்பட்ட தொகை ரூ.25.83 கோடிகள் இரண்டும்

இல்லம்தோறும் இணைப்பு திட்டம் மற்றும் அழைத்தால் இணைப்பு திட்டங்கள் மூலம் வசூலிக்கப்பட்ட தொகைகள் சம்பந்தப்பட்ட கணக்கியல் கொள்கைகள் மற்றும் கணக்கியல் தரநிலைகளின் படி இல்லை.

இந்தியப் பட்டயக் கணக்கறிஞர்கள் கழகத்தால் வழங்கப்பட்ட கணக்காய்வு தொடர்பான தரநிலைகளின் படி நாங்கள் எங்கள் கணக்காய்வை நடத்தினோம். அந்த தரநிலைகளின் படி எங்கள் பொறுப்புகள் மேலும் நிதி அறிக்கைகளின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள் என்னும் பகுதியில் எங்கள் ஆய்வறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது. நிதியறிக்கைகளை கணக்காய்வு செய்ய எங்களுக்கு தேவையான நெறிமுறைத் தேவைகளுடன் இந்தியப் பட்டயக் கணக்கறிஞர்கள் கழகத்தால் வழங்கப்பட்ட நெறிமுறைகளின் கோட்பாடுகளின் படி நாங்கள் வாரியத்தை சார்ந்திருக்கவில்லை. மேலும் நாங்கள் இந்த தேவைகள் மற்றும் நெறிமுறை கோட்பாடுகளுடன் எங்களுடைய பிற நெறிமுறை பொறுப்புகளையும் நிறைவு செய்திருக்கிறோம். எங்களுக்கு கிடைத்த கணக்காய்வு ஆதாரங்கள், தகவல் நிறைவின்மை கருத்துக்கான அடிப்படை தர போதுமானதாகவும் தகுந்ததாகவும் இருந்தது என நாங்கள் நம்புகிறோம்.

### நிர்வாகத்தின் பொறுப்பு மற்றும் நிதிநிலை அறிக்கைகளுக்கான ஆளுகைக்கு பொறுப்பானவர்கள்

நிதி நிலவரம், நிதி செயல்திறன் மற்றும் கணக்கியல் கொள்கைகளின் தொடர்பான கணக்கியல் தரநிலைகள் உள்ளடக்கிய இந்தியாவில் பொதுவாக பின்பற்றப்படும் கணக்கியல் கொள்கைகளின் படி வாரியத்தின் பணப்பரிவர்த்தனையை உண்மையான மற்றும் நியாயமான நோக்கை தரக்கூடிய நிதியறிக்கைகளை உண்டாக்குதலுக்கும் அதை நியாயமாக தாக்கல் செய்வதற்குமான பொறுப்பு மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரிய சட்டம் பிரிவு 38(1)ன் கீழ் அவ்வகைப்பட்ட வடிவத்தில் வகுத்துரைக்கப்பட்ட முறையில் நிதி அறிக்கைகள் உண்டாக்குவதும் வாரியத்தின் இயக்குநர் குழுவினுடையது. நிதிநிலை அறிக்கைகள் தயாரிக்கப்படுவதற்கு தொடர்புடைய சட்டத்தின் விதிகளின் படி போதுமான கணக்கியல் பதிவேடுகளை பராமரித்தல் மற்றும் வாரியத்தின் சொத்துக்களை பாதுகாத்தல் மேலும் மோசடிகள் மற்றும் பிறமுறைகேடுகளைத் தடுத்தல் மற்றும் கண்டறிதல்; பொருத்தமான கணக்கியல் கொள்கைகளின் தேர்வு மற்றும் பயன்பாடு; நியாயமான கவனமான முடிவுகளையும் மதிப்பீடுகளையும் செய்தல்; மோசடி அல்லது பிழை காரணமாக உண்டாகும் தவறாக வழிக்காட்டும் கூற்றுகளை தவிர்த்து, உண்மையான மற்றும் நியாயமான நோக்கை அளிக்கும் நிதிநிலை அறிக்கைகளை தயாரித்து வழங்குவது தொடர்பான கணக்கியல் பதிவேடுகளின் துல்லியம் மற்றும் முழுமையை உறுதி செய்வதற்காக திறம்பட செயல்படும் போதுமான உள் நிதிக்கட்டுப்பாடுகளை வடிவமைத்தல், செயல்படுத்தல் மற்றும் பராமரித்தல் இப்பொறுப்பில் உள்ளடங்கியது.

நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதில் இயக்குநர்கள் குழுவின் பொறுப்பு, ஒரு இயக்க நிறுவனமாகத் தொடர்வதற்கான வாரியத்தின் திறனை மதிப்பிடுவது, தேவையான படி வாரியத்தை பாதிக்கும் நேர்மறை மற்றும் எதிர்மறை செய்திகள், தரவு மற்றும் செயல்பாட்டு விவரங்களை வெளிப்படுத்துவது, இயக்குநர் குழு வாரியத்தை கலைக்க முற்படாதவரையோ அல்லது செயல்பாடுகளை நிறுத்தாதவரையோ அல்லது கணக்கு அடிப்படைகளை தொடர்வதை நிறுத்த சரியான காரணம் இல்லாதவரையோ இயங்கும் வாரியத்தின் கணக்கு அடிப்படைகளை தொடர்வது ஆகும்.

குழுவின் மூலோபாயதிசை மற்றும் குழுவின் பொறுப்புக் கூறல் தொடர்பான கடமைகளை மேற்பார்வையிடுவதற்கு இயக்குநர்கள் குழு பொறுப்பாகும். உதாரணம்: வாரியத்தின் நிதிஅறிக்கை செயல்முறையை மேற்பார்வையிடுவது இயக்குநர்கள் குழு பொறுப்பு.

## நிதிநிலை அறிக்கைகளின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள்

மோசடி அல்லது பிழை காரணமாக நிதிநிலை அறிக்கைகள் ஒட்டுமொத்தமாக தவறாக வழிக்காட்டும் கூற்று இல்லாமல் இருக்கிறது என்பதைப் பற்றிய உறுதியை பெறுவதும், எங்கள் கருத்தை உள்ளடக்கிய தணிக்கையாளரின் அறிக்கையை வெளியிடுவதும் எங்கள் நோக்கங்களாகும். நியாயமான உத்தரவாதம் என்பது ஒரு உயர் மட்ட உத்தரவாதமாகும், ஆனால் கணக்காய்வு தொடர்பான தரநிலைகளின் படி நடத்தப்படும் கணக்காய்வானது, ஒரு தவறான வழிக்காட்டும் கூற்று இருக்கும் போது அதை எப்போதும் கண்டறியும் என்பதற்கு உத்தரவாதம் கிடையாது. தவறான வழிக்காட்டும் கூற்றுகள் மோசடி, பிழை அல்லது அதுபோன்ற கருதப்படும் எந்த மூலத்திலிருந்தும் தனித்தனியாகவோ அல்லது மொத்தமாகவோ துவங்கலாம். பயனாளரால் இவ்வாறான அறிக்கைகளின் அடிப்படையில் எடுக்கப்படும் எந்த பொருளாதார முடிவுகளையும் இது கணிசமாக பாதிக்கும்.

கணக்காய்வுக்கான தரநிலைகள் படி கணக்காய்வின் அங்கமாக கணக்காய்வு முழுதும் நாங்கள் தொழில்முறை மதிப்பீட்டை கையாளுகிறோம் மற்றும் தொழில்முறை ஐயுறவை தொடர்கிறோம்.

மேலும் நாங்கள்:

- மோசடி அல்லது பிழைகாரணமாக நிதிநிலை அறிக்கையிலுள்ள தவறாக வழிக்காட்டும் கூற்றுகளால் ஏற்படும் ஆபாயங்களை கண்டறிந்து மதிப்பிடுகிறோம். அந்த அபாயங்களுக்கு ஏற்ற வகையில் கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்து செயல்படுத்துகிறோம் மற்றும் எங்கள் கருத்தை வழங்க போதுமான மற்றும் தகுந்த ஆதரங்களை திரட்டுகிறோம்.

பிழையால் ஏற்படும் தவறாக வழி நடத்தும் கூற்றை கண்டறியாததில் உள்ள அபாயத்தை விட மோசடியின் விளைவாக ஏற்படும் தவறாக வழி நடத்தும் கூற்றை கண்டறியாததில் உள்ள அபாயம் கூடுதல், ஏனெனில் மோசடி என்பது கூட்டு, மோசடிப்புனைவு, வேண்டுமென்றே புறக்கணித்தல், தவறாகப் பிரதி நிதித்துவம் செய்தல் அல்லது உள்கட்டுப்பாட்டை மீறுதல் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கலாம்.

- சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்க, கணக்காய்வு தொடர்பான உள்கட்டுப்பாடு பற்றிய புரிதலைப் பெறுகிறோம்.
- பயன்படுத்தப்படும் கணக்கியல் கொள்கைகளின் சரியான தன்மை மற்றும் கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயத் தன்மை மற்றும் நிர்வாகத்தால் செய்யப்பட்ட கணக்கியல் மதிப்பீடுகளின் தொடர்புடைய வெளிக்கொணர்வுகளை மதிப்பீடு செய்கிறோம்.
- நிர்வாகம் கடைப்பிடிக்கும் இயங்கும் நிறுவன அடிப்படியிலான கணக்கியலின் பொருத்தத் தன்மையையும் மேலும் கிடைக்கப்பெற்ற கணக்காய்வு ஆதாரங்கள் அடிப்படையில் வாரியத்தின் இயங்கும் நிறுவனத்தின் இயக்கத்தை பாதிக்கும் குறிப்பிட்ட ஐயங்களை எழுப்பக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான நிலைபாதிப்பு கூற்று உள்ளதா எனவும் முடிவு செய்கிறோம். நிலைபாதிப்பு கூற்று உள்ளது என நாங்கள் முடிவுக்கு வந்தால், நிதிநிலை அறிக்கைகளில் உள்ள அத்தொடர்பான வெளிக்கொணர்வுகளை அல்லது அத்தகைய வெளிக்கொணர்வுகள் எங்கள் கருத்தை மாற்றபோதுமானதாக இல்லை என்பதை எங்கள் கணக்காய்வு அறிக்கையின் மூலம் கவன ஈர்ப்பு செய்கிறோம். எங்கள் தணிக்கையாளரின் அறிக்கையின் தேதிவரை பெறப்பட்ட தணிக்கை சான்றுகளின் அடிப்படையில் எங்கள் முடிவுகள் உள்ளன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது படி நிலைகள் வாரியம் ஒரு இயங்கும் நிறுவனமாக தொடர்வதை நிறுத்தக்கூடும்.
- வெளிக்கொணர்வுகள் உட்பட நிதிநிலை அறிக்கைகளின் ஒட்டு மொத்த தாக்கல், கட்டமைப்பு மற்றும் உட்பொருளை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான முன்னிலைப் படுத்துதலை அடையும் விதத்தில் அடிப்படை பரிவர்த்தனைகளை நிதிநிலை அறிக்கை எடுத்துரைக்கிறதா என்பதையும் பார்க்கிறோம்.

வாரியத்தின் நிர்வாக பொறுப்பிலுள்ளவர்களுடன் குறிப்பாக குறிப்பிடப்படாத விஷயங்களுக்கு கூடுதலாக கணக்காய்வின் திட்டமிடப்பட்ட நோக்கம் மற்றும் காலம் மேலும் கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட குறிப்பிட்ட குறைபாடுகள் ஏதும் இருப்பின் அதுவும் உள்ளடங்கிய குறிப்பிட்ட கணக்காய்வின் கண்டறிந்த முடிவுகளை தெரிவிக்கிறோம் மற்றும் வாரியத்தின் நிர்வாக

பொறுப்பிலுள்ளவர்களுக்கு சார்பின்மை தொடர்பாக தகுந்ததார் மீக தேவைகளுடன் நாங்கள் தொகுத்த அறிக்கையை வழங்குகிறோம், மேலும் எங்களுடைய சார்பின்மையை தக்கவைத்துக் கொள்ளக்கூ ய தொடர்புகள் மற்றும் பிற விஷயங்களை மற்றும் தேவையான தருணங்களில் என்று நியாயமாக கருதிய அனைத்தையும் கணக்காய்வாளருக்கு தொடர்பின் பரிச்சயத்தால் ஏற்படும் இடையூறுக்களுக்கு எதிரான பாதுகாப்புகளுடன் அவர்களிடம் தெரிவிக்கிறோம்.

### பிறத்தகவல்கள்:

- வாரிய இயக்கத்தின் அளவு மற்றும் தன்மைக்கு ஏற்ப உள்கணக்காய்வு முறைமையை பலப்படுத்த வேண்டும்.
- நிதி நிலையறிக்கையின் தயாரிப்பிலும் தாக்கலிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய உட்கட்டுபாட்டில் குறிப்பிட்ட குறைப்பாடுகள் மற்றும் பலவீனத்தில் முடியும் வடிவமைப்பு குறைபாடுகள்/கட்டுபாடுகளின் வடிவமைப்பு மற்றும் இயக்கம் கண்டறியப்பட்டுள்ளது மற்றும் கணக்கியல் கையேடு/கணக்கியல் சார்ந்த விஷயங்களில் புரிந்துக்கொள்ளும் நடைமுறை இல்லை, பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள் மற்றும் வழக்கத்தை பின்பற்றுதலுக்குறிய போதிய திறனும் பயிர்ச்சியும் இல்லாதது உட்பட போதிய வடிவமைப்பு மற்றும் கட்டுபாடு செயல்முறைப்படுத்துதலும் வடிவமைப்பும் நிர்வாகத்திற்கு காலவரை அடிப்படையில் குறைபாடுகளை தெரிவிக்கக்கூடிய உள் செயல்முறையும் இல்லை.
- சமசீரற்ற தகவலை தவிர்க்க கணக்காய்வுக்குள்ளாகும் நிதிநிலை அறிக்கைகளை தயாரிக்கும் உட்கட்டுப்பாட்டு வடிவமைப்பு பலப்படுத்தப்பட வேண்டும் மற்றும் காலத்தாமதம், துல்லிய மற்ற மற்றும் முழுமையில்லா தகவல்கள் போன்ற குறைப்பாடுகளை தவிர்க்க முழுமையான மற்றும் துல்லியமான வெளியீடுகளை வழங்க உட்கட்டுபாட்டின் தகவல் தரும் கூறுகள் சரியான நேரத்தில் கண்டறியப்பட வேண்டும் மேலும் பொறுப்புகள் மற்றும் சொத்துகள் கணக்கு வைக்கப்பட வேண்டும்.
- நிர்வாகத்தின் உட்கட்டுபாட்டில் உள்ள, குறிப்பாக நிலம், முடிந்த வேலைகள், கடன் வாங்க செலவான தொகையை முதலீடாக்குதல், திரண்ட செலவு, பொது பேரேட்டின் கணக்குகளை காலாந்திர அடிப்படையில் சரிப்பார்த்தல் போன்ற அசையா சொத்துகளை முதலீடாக்கும் குறைகளை கால அடிப்படியில் தெரிவிக்கும் வழக்கு குறைப்பாடு, நிதிநிலை அறிக்கைகளை கடந்தக் கால கணக்குகளுடன் சரிக்கட்ட காரணமாகிறது.
- போதுமான வடிவமைப்பு/கட்டுபாடுகளை வடிவமைத்து செயல்படுத்துதல் இல்லாதது, பிற துணைப் பிரிவுகளிலிருந்து சில பரிவர்த்தனைகளின் கணக்குவைப்பதை தனிமைப்படுத்தும் பொருளாதார அலகுகளின் உட்கட்டுப்பாடு அடையாளங்காண இயலாத தவறாக வழிக்காட்டும்

தகவல்களுக்கு காரணமாகிறது மற்றும் மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புகளை உள்ளடக்குவது தகவல்களை மாற்றி திருத்துவதற்கும் நிதிநிலை அறிக்கையை மாற்றி சரியமைப்பதற்கும் காரணமாகிறது.

- இதர பிரிவுகளில் வட்டார அலுவகங்களில் தொகுக்கப்பட்ட கணக்கியலுக்கான விரிவான நடைமுறைகள் மற்றும் கணக்கியலுக்கான கையேடு இல்லை இதன் விளைவாக, வட்டார அலுவலகங்கள்/வாரியத்தின் இதர மண்டலங்களில் முழுவதும் ஒரே மாதிரியான கணக்குகள் கடைப் பிடிக்கப்படவில்லை.
- சில பணியாளர்களுக்கு தங்கள் பணியை நிறைவுற செய்வதற்கான பயிர்ச்சியின்மையால் உட்கட்டுபாடு நிறுவுவதில் குறைபாடு உள்ளது.
- பொறுத்தமான கொள்கைகளை தேர்ந்து கடைப்பிடித்தல் மற்றும் கட்டாய கணக்கியல் தரநிலைகள் அல்லது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகளுக்கு இணங்க செயல்படுத்துதலை உறுதிச் செய்ய கட்டுப்பாடு மற்றும் நடைமுறைகளை அமுல்ப்படுத்தாதது, நிதிநிலை அறிக்கைகளில் தகவல் தவிர்ப்பு தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் வாரியத்தின் நிதி அறிக்கையிடல் மற்றும் உட்கட்டுப்பாட்டில் நிர்வாகத்தின் பொறுப்புள்ளவர்களின் கவனக் குறைவான மேற் நோக்கைக் காட்டுகிறது.
- விவகார நிலைகள் மற்றும் வாரியத்தின் இறுதி முடிவுகளில் கணக்கியல் தரநிலைகளை அல்லது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள் பின்பற்றப்படாததின் தனிப்பட்ட அல்லது ஒன்றிணைந்த தாக்கத்தை அளவிட செயற்பாடு இல்லை.

### பிற சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் பற்றிய அறிக்கை:

### நாங்கள் தெரிவிப்பது:

- சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சட்டப்பிரிவு 39(4) கீழ் எங்கள் தணிக்கையின் நோக்கத்திற்கு தேவையான எங்கள் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் சிறந்த அனைத்து தகவல்களையும் விளக்கங்களையும் நாங்கள் தேடிப் பெற்றுள்ளோம் மற்றும் அவை கணக்காய்வாளரின் தகவல் நிறைவின்மை கருத்து பத்தியில் பட்டியலிட்ட குறைகளை தவிர தேவைக்கு நிறைவாக இருப்பது கண்டறியப்பட்டது.

- கணக்கியல் பதிவுகளில் மேலே தகவல் நிறைவின்மை கருத்துக்கான அடிப்படை எனும் பத்தியில் விவரிக்கப்பட்ட அந்த விவகாரங்கள் தவிர இதுவரை வாரியத்தின் கணக்கு ஏடுகளை நாங்கள் ஆய்வு செய்ததில் எங்கள் பார்வையில் தேவையான கணக்கு பதிவுகளை வாரியம் வைத்துள்ளது.

- இருப்பு நிலைக்குறிப்பு, வரவு செலவு கணக்கு, பணப்புழக்க விவர அறிக்கை மேலும் நிதி மூல அறிக்கை மற்றும் நிதிகளின் பயன்பாடுகளை கையாண்டிருக்கும் இவ்வறிக்கையை (எந்த வடிவம் மற்றும் முறையில் நிதிநிலை அறிக்கையை உண்டாக்க வேண்டுமென வழிக்காட்டுதலை வாரியத்தின் சட்டப்பிரிவு 38(1)ல் இன்னும் குறிப்பிடப் படவில்லை எனும் காரணத்தினால்) வாரியம் கடைப்பிடித்து வரும் இதுவரை தொடரும் வழக்கத்தின் வடிவம் மற்றும் முறையிலும் மற்றும் இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் வழங்கிய பொருத்தமான கணக்கியல் தரநிலைகள் வழிக்காடும் முறையில் உண்டாக்கி இருக்கிறோம், மேலும் மேலே தகவல் நிறைவின்மை கருத்துக்கான அடிப்படை எனும் பத்தியில் விவரிக்கப்பட்ட அந்த விவகாரங்கள் தவிர இவ்வறிக்கை வாரியத்தின் ஏடுகளோடு பொருந்துகிறது.

- மேலும் மேலே தகவல் நிறைவின்மை கருத்துக்கான அடிப்படை எனும் பத்தியில் விவரிக்கப்பட்ட அந்த விவகாரங்கள் தவிர எங்கள் கருத்துப்படி, மேற்கூறிய நிதிநிலை அறிக்கைகள், இந்தியப் பட்டயக் கணக்காளர்களின் நிறுவனம் வழங்கிய பொதுவாக இந்தியாவில் ஏற்றுக் கொள்ளப்படுகிற கணக்கியல் தரநிலைகளுடன் இணங்குகிறது.

- நிலையான சொத்துகளைப் புதுப்பித்தல் நிதி முதலீட்டின் பயன்பாடு, இது உருவாக்கப்பட்ட நோக்கத்திற்கு ஏற்ப அல்ல, மேலும் அதைப் பயன்படுத்துவது சட்டத்தின் பிரிவு 31(5) இன் கீழ் அரசாங்கத்தின் ஒப்புதல் இல்லாமல் உள்ளது.

- இயக்குநர்கள் குழுவின் நிர்வாகக் கட்டமைப்பு, வாரியச் சட்டபிரிவு 4 (e) இன் படி இல்லை.

கணேசன் மற்றும் கூட்டுநிறுவனம்
பட்டயக்கணக்கறிஞர்கள்
நிறுவன பதிவு எண்: 000859S

– ஒப்பம் –
என் .வெங்கட்ரமணி
பங்காளர்
உறுப்பினர்.எண்: 215145

இடம்: சென்னை
நாள்: 06.11.2024

தனிப்பட்ட ஆவண அடையாள எண்: 23215145BKETGF5453

## 2022–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதிய இருப்பு நிலைக்குறிப்பு

| விவரங்கள் | அட்டவணை எண் | 2021–22 (ரூபாய்) | 2020–21 (ரூபாய்) |
|---|---|---|---|
| **பொறுப்புகள்** | – | – | – |
| பங்களிப்பு | அ | 24,25,96,37,043.87 | 22,15,10,81,902.89 |
| அரசுமானியம் | ஆ | 77,68,57,06,219.53 | 66,21,80,56,823.53 |
| நீண்டகாலக் கடன்கள் | இ | 19,15,31,61,691.00 | 19,19,87,94,784.00 |
| நிறுத்திவைக்கப்பட்ட வரவுகளும் வைப்புத் தொகைகளும் | ஈ | 17,51,90,39,569.23 | 15,88,64,03,757.16 |
| நடப்பு பொறுப்புகள் மற்றும் ஒதுக்கீடுகள் | உ | 11,62,78,66,235.75 | 10,66,68,52,406.07 |
| மொத்தம் | | 1,50,24,54,10,759.38 | 1,34,12,11,89,673.65 |
| **சொத்துக்கள்** | – | – | – |
| நிலையான சொத்துக்கள் | ஊ | 1,02,19,95,29,902.71 | 90,56,71,08,038.86 |
| நடப்பு சொத்துக்கள், கடன்கள், முன்பணம் மற்றும் வைப்புத் தொகை | எ | 27,43,45,50,074.02 | 23,51,63,73,395.31 |
| சேர்ந்துள்ள பற்றாக்குறை | | 20,61,13,30,782.65 | 20,03,77,08,239.48 |
| குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள் மற்றும் கணக்குகள் மீதான குறிப்புகள் | அஈ மற்றும் அஉ | | |
| மொத்தம் | | 1,50,24,54,10,759.38 | 1,34,12,11,89,673.65 |

நிதிநிலை அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியிலிருந்து வரும் குறிப்புகள்

இதே தேதியிட்ட எங்கள் அறிக்கையின் படி
கணேசன் மற்றும் குழுமத்திற்க்காக
பட்டய கணக்காளர்கள்

சென்னை குடிநீர் வாரியத்திற்காக

நிருவன பதிவு எண்: 000859S

| – ஒப்பம் – | – ஒப்பம் – | – ஒப்பம் – |
|---|---|---|
| எம்.ஸ்ரீனிவாச ராகவன் | டாக்டர். டி.ஜி.வினய், இ.ஆ.ப., | என் .வெங்கட்ரமணி |
| நிதி இயக்குனர் | நிர்வாக இயக்குனர் | பங்காளர் |
| | | உ.எண்: 215145 |

இடம்: சென்னை

த.ஆ.அ.எண்: 23215145BKETGF5453

நாள்: 06.11.2024

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்

## 2022-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதி முடிந்த ஆண்டின் வரவு - செலவு

| விவரங்கள் | அட்டவணை எண் | 2021-22 (ரூபாய்) | 2020-21 (ரூபாய்) |
|---|---|---|---|
| **வரவினங்கள்** | | | |
| குடிநீர் விற்பனை மற்றும் கழிவுநீர் கட்டணங்கள் | ஏ | 5,60,99,91,403.75 | 4,81,31,72,576.43 |
| குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி | ஐ | 2,40,05,46,793.00 | 2,32,16,99,155.00 |
| அரசு மானியம் | | 2,36,49,17,016.00 | 2,24,31,80,125.00 |
| இதர வருமானம் | ஒ | 1,27,11,34,205.26 | 79,51,15,137.75 |
| முந்தைய கால சரிகட்டல் கணக்கு | ஓ | 33,84,33,566.63 | 93,73,23,721.87 |
| ஐயப்பாடுள்ள கடன்களுக்குக் கூடுதல் ஒதுக்கீடு | | | |
| - குடிநீர் கட்டணம் அளவி பொருத்தப்பட்டது | | 0.00 | 89,78,779.40 |
| -குடிநீர் கட்டணம் அளவி பொருத்தப்படாதது | | 15,88,50,496.50 | 0.00 |
| - வரிகள் | | 0.00 | 0.00 |
| வரவை விட செலவு அதிகம் | | 57,36,22,543.17 | 1,26,03,08,569.56 |
| மொத்தம் | | 12,71,74,96,024.31 | 12,37,97,78,065.01 |
| **செலவினங்கள்** | | | |
| இயக்குதல் மற்றும் பராமரிப்புச் செலவுகள் | ஔ | 7,01,73,79,139.11 | 6,62,73,31,216.93 |
| பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் ஒதுக்கீடுகள் | அஅ | 2,49,98,12,738.42 | 2,50,57,57,676.44 |
| அலுவலகம் மற்றும் நிர்வாகச் செலவுகள் | அஆ | 10,57,69,973.37 | 8,20,59,182.50 |
| குடிநீர் ஊர்தி வாடகைக் கட்டணங்கள் / வறட்சி நிவாரண செலவுகள் | | 83,62,83,508.32 | 88,33,00,788.00 |
| தேய்மானம் | | 1,28,12,11,053.71 | 1,30,01,41,929.81 |
| கடன் பணிச் செலவுகள் | அஇ | 80,27,60,086.00 | 83,65,11,777.50 |
| முந்தைய கால சரிகட்டல் கணக்கு | அஈ | 0.00 | 0.00 |
| ஐயப்பாடுள்ள கடன்களுக்குக் கூடுதல் ஒதுக்கீடு | | | |
| - குடிநீர் கட்டணம் அளவி பொருத்தப்பட்டது | | 9,28,84,007.85 | 0.00 |
| -குடிநீர் கட்டணம் அளவி பொருத்தப்படாதது | | 0.00 | 2,20,57,191.36 |
| - வரிகள் | | 8,13,95,517.53 | 12,26,18,302.47 |
| குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள் மற்றும் கணக்குகள் மீதான குறிப்புகள் | அஈ மற்றும் அஉ | | |
| மொத்தம் | | 12,71,74,96,024.31 | 12,37,97,78,065.01 |

நிதிநிலை அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியிலிருந்து வரும் குறிப்புகள்

இதே தேதியிட்ட எங்கள் அறிக்கையின் படி
கணேசன் மற்றும் குழுமத்திற்க்காக
பட்டய கணக்காளர்கள்
நிருவன பதிவு எண்: 000859S

சென்னை குடிநீர் வாரியத்திற்காக

- ஒப்பம் -
எம்.ஸ்ரீனிவாச ராகவன்
நிதி இயக்குனர்

- ஒப்பம் -
டாக்டர். டி.ஜி.வினய், இ.ஆ.ப.,
நிர்வாக இயக்குனர்

- ஒப்பம் -
என் .வெங்கட்ரமணி
பங்காளர்
உ.எண்: 215145
த.ஆ.அ.எண்: 23215145BKETGF5453

இடம்: சென்னை
நாள்: 06.11.2024

## மார்ச் 31, 2022 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பணப்புழக்க அறிக்கை

| விவரங்கள் | 2021-22 | | 2020-21 | |
|---|---|---|---|---|
| | (ரூபாய்) | (ரூபாய்) | (ரூபாய்) | (ரூபாய்) |
| அ. செயல்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து பணப்புழக்கம் | | | | |
| வரிவிதிப்புக்கு முன் நிகர லாபம்/ (நட்டம்), மற்றும் அசாதாரண பொருள் | | (57,36,22,543.17) | | (1,26,03,08,569.56) |
| சரிசெய்தல் | | | | |
| தேய்மானம் | 1,28,12,11,053.71 | | 1,30,01,41,929.81 | |
| ஐயப்பாடுள்ள கடன்களுக்கான ஒதுக்கீடு | 1,54,29,028.88 | | 13,56,96,714.43 | |
| வட்டி செலவுகள் | 80,27,60,086.00 | | 83,65,11,777.50 | |
| வட்டி வருமானம் | (62,29,85,715.42) | 1,47,64,14,453.17 | (53,26,08,952.33) | 1,73,97,41,469.41 |
| செயல்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன் செயல்பாட்டு லாபம் – (i) | | 90,27,91,910.00 | | 47,94,32,899.85 |
| செயல்பாட்டு மூலதனத்தில் மாற்றங்கள் | | | | |
| சரக்குகளில் குறைவு /(அதிகரிப்பு) | (2,26,32,937.98) | | (12,04,09,453.42) | |
| வர்த்தக வரவுகளில் குறைவு/ (அதிகரிப்பு) | (77,14,18,446.97) | | (1,72,79,63,432.37) | |
| குறுகிய கால கடன்கள் மற்றும் முன்பணங்களில் குறைவு /(அதிகரிப்பு) | 25,04,29,779.86 | | (89,19,62,504.00) | |
| வர்த்தகத்திற்கு செலுத்த வேண்டிய தொகையில் அதிகரிப்பு/(குறைவு) | 47,95,28,565.94 | | 90,59,39,246.18 | |
| தற்போதைய பொறுப்புகளில் அதிகரிப்பு/(குறைவு) – மற்றவை | (25,49,49,346.26) | | 42,87,80,156.60 | |
| ஒத்திவைக்கப்பட்ட கடன்கள் மற்றும் வைப்புகளில் அதிகரிப்பு | 1,63,26,35,812.07 | | 1,07,83,80,732.12 | |
| செயல்பாட்டுமூலதனத்தில் நிகர மாற்றங்கள்–(ii) | | 1,31,35,93,426.66 | | (32,72,35,254.89) |
| | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| செலுத்தப்பட்ட வருமானவரி (நிகர திரும்பப்பெறுதல் ) – (iii) | | (29,80,264.00) | | 74,62,534.00 |
| இயக்க நடவடிக்கைகளில் இருந்து பெறப்படும் நிகர பணம் [(i)+(ii)+(iii)] | | 2,21,34,05,072.66 | | 15,96,60,178.96 |
| ஆ. முதலீட்டு நடவடிக்கைகளில் பணப்புழக்கம் | | | | |
| CWIP யும் சேர்த்து நிலையான சொத்துக்களை வாங்குதல் | (12,91,36,32,917.56) | | (8,83,73,17,935.94) | |
| வைப்புத்தொகை மற்றும் முதலீடுகளில் குறைவு | (24,26,77,166.63) | | 45,84,71,014.41 | |
| பெறப்பட்ட வட்டி | 24,09,03,862.42 | | 18,08,81,696.33 | |
| முதலீட்டு நடவடிக்கையில் பெறப்பட்ட நிகர பணம் | | (12,91,54,06,221.77) | | (8,19,79,65,225.20) |
| இ. நிதி நடவடிக்கையில் பணப்புழக்கம் | | | | |
| செலுத்தப்பட்ட வட்டி | (6,63,25,476.00) | | (10,02,68,832.00) | |
| நிதி நிறுவனங்களில் நீண்ட கால கடன் அதிகரிப்பு | 16,00,00,000.00 | | 30,00,00,000.00 | |
| நிதி நிறுவனங்களுக்கு திருப்பிச் செலுத்திய கடன் | (20,56,33,093.00) | | (23,10,97,589.00) | |
| தமிழக / இந்திய அரசின் மானியம் அதிகரிப்பு | 11,46,76,49,396.00 | | 9,55,05,47,591.00 | |
| அரசு/பொதுமக்களின் பங்களிப்பு அதிகரிப்பு | 2,10,85,55,140.98 | | 1,63,80,63,521.08 | |
| நிதி நடவடிக்கையில் பயன்படுத்திய நிகர பணம் | | 13,46,42,45,967.98 | | 11,15,72,44,691.08 |
| பணம் மற்றும் பணத்திற்கு சமமானவைகளின் நிகர அதிகரிப்பு/ (குறைவு) | | 2,76,22,44,818.87 | | 3,11,89,39,644.84 |
| ஆண்டின் தொடக்கத்தில் பணம் மற்றும் பணத்திற்கு சமமானவைகள் | | 10,52,51,35,360.47 | | 7,40,61,95,715.63 |
| ஆண்டின் இருதியில் பணம் மற்றும் பணத்திற்கு சமமானவைகள் | | 13,28,73,80,179.34 | | 10,52,51,35,360.47 |
| | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| பணம் மற்றும் பணச் சமமானவை பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன: | | | | |
| கையிருப்பு | | 7,03,850.35 | | 4,05,516.35 |
| வங்கியிருப்பு – நடப்பு கணக்கில் | | 6,45,92,87,517.86 | | 4,50,69,07,801.59 |
| வங்கியிருப்பு– குறுகிய கால வைப்புத்தொகை | | 6,82,73,88,811.13 | | 6,01,78,22,042.53 |
| இருப்புநிலைக் குறிப்பில் வெளிப்படுத்தப்பட்ட பணம் மற்றும் பணச் சமமானவை | | 13,28,73,80,179.34 | | 10,52,51,35,360.47 |

நிதிநிலை அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியிலிருந்து வரும் குறிப்புகள்

இதே தேதியிட்ட எங்கள் அறிக்கையின் படி
கணேசன் மற்றும் குழுமத்திற்க்காக
பட்டய கணக்காளர்கள்
நிருவன பதிவு எண்: 000859S

சென்னை குடிநீர் வாரியத்திற்காக

– ஒப்பம் –
எம்.ஸ்ரீனிவாச ராகவன்
நிதி இயக்குனர்

– ஒப்பம் –
டாக்டர். டி.ஜி.வினய், இ.ஆ.ப.,
நிர்வாக இயக்குனர்

– ஒப்பம் –
என் .வெங்கட்ரமணி
பங்காளர்
உ.எண்: 215145

இடம்: சென்னை
நாள்: 06.11.2024

## 2021–22 ஆம் நிதியாண்டுக்கான நிதி அறிக்கையின் ஆதாரங்கள் மற்றும் செயல்முறைகள்

| அ. ஆதாரங்கள்: | 2021–22 (ரூபாய்) | 2020–21 (ரூபாய்) |
|---|---|---|
| உள் உருவாக்கப்பட்ட நிதி (தேய்மானம், வட்டி மற்றும் ஐயப்பாடுள்ள கடன்களுக்கு முன் உள்ள நிகர உபரித்தொகை) | 1,52,54,65,651.42 | 1,01,17,13,469.18 |
| பங்களிப்புகள் | 2,10,85,55,140.98 | 1,63,80,63,520.58 |
| அரசிடமிருந்து பெறப்பட்ட மானியங்கள் | 11,46,76,49,396.00 | 9,55,05,47,591.00 |
| நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட நீண்ட கால கடன்கள் | 16,00,00,000.00 | 30,00,00,000.00 |
| வைப்புத்தொகைகள் மற்றும் முதலீடுகள் | 0.00 | 15,62,88,633.41 |
| திரும்பப்பெறப்பட்ட வருமானவரி | 51,11,630.00 | 1,01,17,680.00 |
| மொத்த ஆதாரங்கள் | 15,26,67,81,818.40 | 12,66,67,30,894.17 |
| ஆ. செயல்முறைகள்: | | |
| வைப்புத்தொகைகள் மற்றும் முதலீடுகள் | 62,44,47,045.63 | 0.00 |
| நிலையான சொத்துக்களின் மீதான முதலீடுகள் | 12,91,36,32,917.56 | 8,83,73,17,935.94 |
| நிதி நிறுவனங்களுக்கு திருப்பிச் செலுத்திய கடன்கள் | 20,56,33,093.00 | 23,10,97,589.00 |
| செலுத்தப்பட்ட வட்டி | 6,63,25,476.00 | 10,02,68,831.50 |
| செலுத்தப்பட்ட வருமானவரி | 80,91,894.00 | 26,55,146.00 |
| அதிகரிக்கப்பட்ட செயல்பாட்டு மூலதனம் | 1,44,86,51,392.21 | 3,49,53,91,391.73 |
| மொத்த செயல்முறைகள் | 15,26,67,81,818.40 | 12,66,67,30,894.17 |

நிதிநிலை அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியிலிருந்து வரும் குறிப்புகள்

இதே தேதியிட்ட எங்கள் அறிக்கையின் படி
கணேசன் மற்றும் குழுமத்திற்க்காக
பட்டய கணக்காளர்கள்
நிருவன பதிவு எண்: 000859S

சென்னை குடிநீர் வாரியத்திற்காக

– ஒப்பம் –
எம்.ஸ்ரீனிவாச ராகவன்
நிதி இயக்குனர்

– ஒப்பம் –
டாக்டர். டி.ஜி.வினய், இ.ஆ.ப.,
நிர்வாக இயக்குனர்

– ஒப்பம் –
என் .வெங்கட்ரமணி
பங்காளர்
உ.எண்: 215145

இடம்: சென்னை
நாள்: 06.11.2024

## அட்டவணை – அ– பங்களிப்பு

| விவரங்கள் | 2021–22 (ரூபாய்) | 2020–21 (ரூபாய்) |
|---|---|---|
| அரசிடமிருந்து பங்குகள் | 4,87,96,58,365.32 | 4,87,96,58,365.32 |
| பொதுமக்களிடமிருந்து பங்குகள் | 10,12,89,91,712.14 | 9,21,43,31,891.02 |
| சென்னை மாநகராட்சியிடமிருந்து மாற்றப்பட்ட பொறுப்புகளை விட அதிக சொத்துக்கள் | 15,91,67,365.25 | 15,91,67,365.25 |
| பொதுப்பணித்துறையிலிருந்து மாற்றப்பட்ட பொறுப்புகளை விட அதிக சொத்துக்கள் | 5,18,87,380.46 | 5,18,87,380.46 |
| தற்காலிக வாரியத்திலிருந்து மாற்றப்பட்ட பொறுப்புகளை விட அதிக சொத்துக்கள் | 8,42,251.86 | 8,42,251.86 |
| உள்ளாட்சி அமைப்புகயிலிருந்து மாற்றப்பட்ட பொறுப்புகளை விட அதிக சொத்துக்கள் | –43,69,42,738.80 | –43,69,42,738.80 |
| மூலதன ஒதுக்கீடு | 8,37,04,65,204.64 | 7,17,65,69,884.78 |
| நிலையான சொத்துக்களை புதுப்பித்தல் நிதி | 1,10,55,67,503.00 | 1,10,55,67,503.00 |
| மொத்தம் | 24,25,96,37,043.87 | 22,15,10,81,902.89 |

## அட்டவணை – ஆ– அரசு மானியம்

| விவரங்கள் | 2021–22 (ரூபாய்) | 2020–21 (ரூபாய்) |
|---|---|---|
| இரண்டாவது சென்னை குடிநீர்த் திட்டம் | 1,37,37,90,000.53 | 1,37,37,90,001.00 |
| சென்னை மாநகர நதிநீர் பாதுகாப்புத் திட்டம் | 3,51,59,00,000.00 | 3,51,59,00,000.00 |
| ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் | 10,32,73,77,085.00 | 7,74,73,77,085.00 |
| நெம்மேலியிலுல்ல கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் | 14,80,04,72,178.00 | 10,94,96,74,351.00 |
| இதர வகைகள் | 15,93,22,10,692.00 | 15,36,39,90,257.53 |
| தேர்வாய்கண்டிகையிலிருந்து பூண்டி வரை | 70,62,00,000.00 | 70,62,00,000.00 |
| சீர்மிகு நகரம் | 73,66,45,647.00 | 61,26,50,620.00 |
| 400 ந.ஒ.ப.லி.லி கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் | 36,67,79,400.00 | 14,31,79,400.00 |
| துய்மை இந்தியா திட்டம் | 21,19,25,000.00 | 21,19,25,000.00 |
| சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை | 1,74,68,82,081.00 | 75,59,45,630.00 |
| சென்னை பெருநகர் வளர்ச்சி துதுக்குழு திட்டம் | 12,51,57,01,178.00 | 10,52,35,01,178.00 |
| 45 ந.ஒ.ப.லி.லி – மூ.நி.த.ச.ப | 5,18,43,00,000.00 | 5,10,48,00,000.00 |
| உள்ளாட்சி மானியங்கள் | 1,90,34,07,692.00 | 1,90,34,07,692.00 |
| பொறுப்புரிமை மாற்றம் நிதி | 8,36,41,15,266.00 | 7,30,57,15,609.00 |
| மொத்தம் | 77,68,57,06,219.53 | 66,21,80,56,823.53 |

## அட்டவணை – இ – நீண்ட கால கடன்கள்

மீஞ்சூர் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வழங்கியதற்கு அரசிடமிருந்து பெற்ற மானியத் தொகை ரூ.175.00 கோடி (சென்ற ஆண்டு – ரூ.175.00 கோடி), சேரி குடியிருப்புகள் மற்றும் புற்றுநோய் மருத்துவ நிறுவனத்திற்கு ரூ.36.10 கோடி (சென்ற ஆண்டு – ரூ.36.11 கோடி), முந்தைய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் பெறப்பட்ட கடன்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு நிதி ஆகிய நிறுவனங்களுக்கு வட்டி தொகையை திருப்பி செலுத்துவதற்காகவும் ரூ.1.51 கோடி (சென்ற ஆண்டு – ரூ.1.67 கோடி), மற்றும் வறட்சிப் பணிகளுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.23.88 கோடி (சென்ற ஆண்டு – ரூ.11.54 கோடி) மேற்கண்டவற்றில் உள்ளடங்கிய தொகையாகும்.

IX. அட்டவணை – ஐ – குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி
குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி– ரூ.240.05 கோடி (சென்ற ஆண்டு – ரூ.232.17 கோடி)

பெருநகர சென்னை மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட ஆண்டு மதிப்பின் சதவீதத்தின் அடிப்படையில் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி கணக்கிடப்படுகிறது.

X. அட்டவணை – ஒ – இதர வருமானம்

1. வங்கியிலிருந்து பெறப்பட்ட வட்டி ரூ.60.97 கோடி (சென்ற ஆண்டு – ரூ.51.21 கோடி)

வட்டி வருமானம் என்பது வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் உள்ள வைப்புத்தொகை, சேமிப்பு வங்கிக் கணக்கு மற்றும் குறுகிய கால வைப்புத்தொகை ஆகியவற்றின் மீதான திரட்டப்பட்ட வட்டி ஆகும்.

2. தள்ளுபடி பெற்றது – ரூ. 1.37 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 1.76 கோடி)

மேற்கூறிய தொகையானது, ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்கு முன்னர் M/s சென்னை டிசலைனேஷன் லிமிடெட் நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்ட கட்டணத்தில் கிடைக்கும் தள்ளுபடியைக் குறிக்கிறது.

3. கழிப்பொருள் விற்பனை – ரூ.0.22 கோடி (சென்ற ஆண்டு – ரூ.0.14 கோடி)

மேற்கண்ட தொகையானது, மார்ச் 31, 2022 இல் முடிவடையும் ஆண்டில் கழிப்பொருட்களின் விற்பனையின் மூலம் வாரியத்தால் பெறப்பட்ட தொகையைக் குறிக்கிறது.

XI. அட்டவணை – ஓ – பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் ஒதுக்கீடுகள்:

1. ஓய்வூதியம்

ஓய்வூதிய நிதியின் சேர்திரள் இருப்பு (பேரேட்டு எண் – 5790) – ரூ.92.54 கோடி (சென்ற ஆண்டு – ரூ.92.54 கோடி). (பேரேட்டு எண் – 8010) ரூ.129.09 கோடி (சென்ற ஆண்டு – ரூ.102.09 கோடி) முதலீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் (பேரேட்டு எண் – 8011) – ரூ.90.88 கோடி (சென்ற ஆண்டு – ரூ.74.20 கோடி) பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் முதலீடு செய்யப்பட்டுள்ளது. பொறுப்பை உறுதிசெய்த பிறகு ஓய்வூதியத்திற்கான உண்மையான மதிப்பீடு கணக்கில் கொண்டு வரப்படும்.

2. ஓய்வூதிய பலன்கள்

அ) பணிக்கொடை, தொகுப்பூதியம் மற்றும் ஈட்டிய விடுப்பை பணமாக்குதல் போன்ற ஓய்வூதிய பலன்கள் பண அடிப்படையில் கணக்கிடப்படுகின்றன.

ஆ)பொறுப்பை உறுதிசெய்த பிறகு ஓய்வூதியத்திற்கான உண்மையான மதிப்பீடு கணக்கில் கொண்டு வரப்படும்.

XII. அட்டவணை – ஔ – கடன் சேவைக் கட்டணம் – நிதி நிறுவனங்கள்

நடப்பு ஆண்டில் நிதி நிறுவனங்களின் கடனுக்கான வட்டி ரூ. 20.93 கோடி (சென்ற ஆண்டு – ரூ.20.89 கோடி) இதில் ரூ.14.18 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 13.63 கோடி) மூலதனமாக்கப்பட்டுள்ளது.

XIII. இதர குறிப்புகள்

1. வரி ஒத்திவைப்புகள் – தொடர்ந்து ஏற்படும் இழப்புகளை கருத்தில் கொண்டு, வரிகுறைப்பாடுகள் எதிர் காலத்தில் ஏற்படாது என்பதால் ஒத்திவைக்கப்பட்ட வரிகள் மீது ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை.
2. நிச்சயமற்ற பொறுப்புகள் – வாரியத்திற்கு எதிராக நீதிமன்றங்களில் 123 வழக்குகள் (உச்ச நீதிமன்றம் – இல்லை. உயர் நீதிமன்றம் – 76, தேசிய பசுமை தீர்ப்பாயம்– 13, நடுவர் மன்றம்– 13, துணை நீதிமன்றம் – 31 மற்றும் மதுரை நீதிமன்றம் – இல்லை) நிலுவையில் உள்ளன.
3. மூன்றாம் நபர் நிலுவைகள் ஒத்திசைவு மற்றும் உறுதி படுத்துதலுக்கு உட்பட்டவை.
4. சென்ற ஆண்டின் புள்ளிவிவரங்கள், நடப்பு ஆண்டு வகைப்பாட்டிற்கு இணங்க தேவையான இடங்களில் மறு தொகுப்பு செய்யப்பட்டுள்ளன.

இதே தேதியிட்ட எங்கள் அறிக்கையின் படி
கணேசன் மற்றும் குழுமத்திற்க்காக
பட்டய கணக்காளர்கள்

சென்னை குடிநீர் வாரியத்திற்காக — நிருவன பதிவு எண்: 000859S

| – ஒப்பம் – | – ஒப்பம் – | – ஒப்பம் – |
|---|---|---|
| எம்.ஸ்ரீனிவாச ராகவன் | டாக்டர். டி.ஜி.வினய், இ.ஆ.ப., | என் .வெங்கட்ரமணி |
| நிதி இயக்குனர் | நிர்வாக இயக்குனர் | பங்காளர் |
| | | உ.எண்: 215145 |

இடம்: சென்னை
நாள்: 06.11.2024

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (சென்னைக் குடிநீர்) துறை

### சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் பணிகள் குறித்த 2022 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் மதிப்பாய்வு

அ. நிதி (ஆதாரம்) செயல்பாடுகள்

1. சென்னைப் பெருநகரப் பகுதியில் வாழும் மக்களுக்கு, அதிகரித்து வரும் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வசதி ஆகியவற்றைத் திட்டமிட்ட மேம்பாடு மற்றும் உரிய வழியில் முறைப்படுத்தவும், குறிப்பாக போதிய அளவு பாதுகாக்கப்பட்ட தரமான குடிநீர் வழங்கவும் மற்றும் கழிவுநீரை வெளியேற்றவும், பொது சுகாதாரத்தைப் பாதுகாக்கவும் மற்றும் அவற்றோடு தொடர்புடைய பணிகள் அனைத்தையும் கவனிப்பதற்கென்று 1978 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றுதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28 / 1978) கீழ் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் ஏற்படுத்தப்பட்டது..

2. 2022 ஆம் ஆண்டு மார்ச் 31 அன்று வாரியத்தின் மொத்த சொத்துகள் ரூ.12,963.41 கோடி உள்ளது. இதில் நிகர நிலையான சொத்துக்களான ரூ.10,219.95 கோடி மற்றும் ரூ.2,743.46 கோடியின் தற்போதைய சொத்துக்கள் பல்வேறு சிறுகடனாளிகள், கடன்கள், முன்பணம் மற்றும் வைப்புத் தொகை ஆகியவை உள்ளடங்கும்.

3.வாரியத்தின் மொத்தப் பொறுப்புகள் ரூ.15,024.54 கோடி. இதில் பங்களிப்பு ரூ.2,425.96 கோடி. அரசு மானியங்கள் ரூ.7,768.57கோடி, நீண்ட கால கடன்கள் ரூ.1,915.32 கோடி மற்றும் வைப்புத் தொகைகள் மற்றும் ஒத்திவைக்கப்பட்ட கடன்கள் உட்பட நடப்பு கடன்கள் ரூ.2,914.69 கோடி ஆகியவை உள்ளடங்கும்.

பின்வரும் அட்டவணை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று கட்டணங்கள் மற்றும் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வரி மூலம் வரும் வருமானத்தை காட்டுகிறது:

(ரூ. இலட்சத்தில்)

| அ. குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று கட்டணங்கள் | 2021-22 | 2020-21 |
|---|---|---|
| அளவுமானி பொருத்தப்பட்டவை | | |
| வீட்டு உபயோகத்திற்கு | 2,855.34 | 2,398.13 |
| வணிகத்திற்கு | 17,796.46 | 15,048.67 |

| | | |
|---|---|---|
| வணிக நிறுவனங்களுக்கு | 2,427.15 | 2,021.75 |
| நகராட்சிகளுக்கு | 1,322.70 | 540.00 |
| **அளவுமானி பொருத்தப்படாதவை** | | |
| வீட்டு உபயோகத்திற்கு | 7,064.96 | 6,881.45 |
| வணிகத்திற்கு | 3,806.64 | 3,920.32 |
| வணிக நிறுவனங்களுக்கு | 43.68 | 48.08 |
| ஊர்திகள் மூலம் குடிநீர் வழங்குதல் | 3,403.18 | 4,356.70 |
| கழிவு நீரகற்றுதல் கட்டணம் | 15,422.89 | 11,241.26 |
| சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் விற்பனை | 1,956.91 | 1,675.38 |
| **மொத்தம் (அ)** | **56,099.91** | **48,131.74** |
| **ஆ. குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வரி** | | |
| குடிநீர் வரி | 5,144.03 | 4,985.88 |
| கழிவுநீரகற்று வரி | 18,861.44 | 18,231.11 |
| **மொத்தம் (ஆ)** | **24,005.47** | **23,216.99** |
| **ஆகமொத்தம்(அ + ஆ)** | **80,105.38** | **71,348.73** |
| இ. இதர வருமானம் | 12,711.34 | 7,951.15 |
| ஈ. திரும்பபெறப்பட்ட ஒதுக்கீடு | 1,588.50 | 89.79 |
| உ. மானியங்கள் | 23,649.17 | 22,431.80 |
| ஊ. முந்தைய கால சரிகட்டல் | 3,384.34 | 9,373.24 |
| **மொத்தம் வருமானம் (அ + ஆ + இ + ஈ + உ + ஊ)** | **1,21,438.73** | **1,11,194.71** |
| எ. செலவினம் | 1,25,432.16 | 1,22,351.03 |
| ஏ. முந்தையகால சரிகட்டல் | 0.00 | 0.00 |
| ஐ. ஐயப்பாடுள்ள கடன்களுக்கு ஒதுக்கீடு | 1,742.80 | 1,446.75 |
| **மொத்தச் செலவினம் (எ + ஏ + ஐ)** | **1,27,174.96** | **1,23,797.78** |
| ஒ. பற்றாக்குறை | 5,736.23 | 12,603.07 |

4. 2021–22 ஆம் ஆண்டில் மொத்த வருமானம் ரூ.1,214.39 கோடி, செலவு ரூ.1,271.75 கோடி இருந்தது. இதன் விளைவாக ரூ.57.36 கோடி நிகரப்பற்றாக்குறை ஏற்பட்டது. இதற்கு முந்தைய ஆண்டில்(2020–21) ரூ.126.03 கோடி பற்றாக்குறை இருந்தது. வரி மற்றும் கட்டணங்களின் பொதுத்திருத்தத்தின் காரணமாக வருவாய் அதிகரிப்பதால் பற்றாக்குறை ரூ.126.03 கோடியிலிருந்து ரூ.57.36 கோடியாகக் குறைக்கப்பட்டது.

5. மேலும் மொத்த வருவாய் மொத்த செலவை விட குறைவாக இருந்தாலும், வாரியம் பயனுள்ள மற்றும் திறமையான சேவைகளை வழங்கி வருகிறது. அதன் இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைய தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது.

6. ஒவ்வொரு ஆண்டும் வாரியம் குடிநீர் வழங்கல் மற்றும் பிற தொடர்புடைய பணிகளை அதிகரிக்க பல்வேறு திட்டங்களை செயல்படுத்துகிறது. எனவே, வட்டித் தொகையின் ஒரு பகுதி ஆண்டுக்கான மொத்த வட்டியிலிருந்து கழிக்கப்பட்டு, அதுவே மூலதன வட்டியாக திட்டச் செலவில் சேர்க்கப்படும். ஆண்டில் மொத்தவட்டியான ரூ.94.45 கோடியில் இருந்து ரூ.14.18 கோடி கழிக்கப்பட்டு மூலதனமாக்கப்பட்டது. வட்டியின் மூலதனமாக்கலுக்குப் பிறகு, 2021–22 ஆம் ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவுக் கணக்கின் கீழ் ரூ.80.28 கோடி வட்டியாகக் காட்டப்பட்டுள்ளது.

7. குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் அமைப்பு திறன் மேம்பாட்டிற்காக மற்றும் வளர்ச்சிக்காக, வாரியம் இரண்டு கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்களை அமைத்துள்ளது. ஒன்று மீஞ்சூரில் உள்ள கடல்நீரை குடிநீராக்கி திரும்ப ஒப்படைக்கும் அடிப்படையிலானது; மற்றொன்று, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப் தல் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசின் நிதியுதவி, தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு திட்டம்–III, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை திட்டம் ஆகியவற்றின் நிதியுதவியின் கீழ் நெம்மேலியில் அமைக்கப்பட்டுள்ள கடல் நீரை குடிநீராக்கும் நிலையம்.

### ஆ . செயல்முறை

### குடிநீர் வழங்கல் மேலாண்மை

### குடிநீர் ஆதாரங்கள்

சென்னை நகர மக்களின் குடிநீர் தேவை, மேற்பரப்பு நீராதாரங்கள், கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்கள் மற்றும் நிலத்தடி நீர் ஆதாரங்கள் மூலம் பெறப்படுகிறது. சென்னை குடிநீர் வாரியத்தின் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் சுத்திகரிப்பு திறன் நாளொன்றுக்கு 1,494 மில்லியன் லிட்டர். 1914 ஆம் ஆண்டில் கீழ்ப்பாக்கத்தில் நிறுவப்பட்ட முதலாவது குடிநீர் சுத்திகரிப்பு நிலையம், 100 ஆண்டுகளுக்குமேல் தொடர்ந்து சென்னைப் பெருநகர மக்களின் குடிநீர் தேவையை நிறைவு செய்து வருகிறது. சென்னைப் பெருநகர மக்களுக்கு 16 பிரதான குடிநீர் விநியோக நிலையங்கள் மற்றும் 86 சிறிய நீரேற்று நிலையங்களிலிருந்து 5,247 கி.மீ. நீளமுள்ள குடிநீர் குழாய்கள் மூலமாக, குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

## குடிநீர் வழங்கல் திட்டங்கள்:
## நடைபெற்று வரும் குடிநீர் திட்டப் பணிகள்

(i) நெம்மேலியில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் மற்றும் கடல் நீரை குடிநீராக்கும் நிலையத்திலிருந்து பல்லாவரம் வரை குழாய் பதிக்கும் பணிகள்

வளர்ந்து வரும் சென்னை பெருநகரின் குடிநீர் தேவை மற்றும் வழங்கல் இடைவெளியை பூர்த்தி செய்வதற்காக தென்சென்னை கிழக்கு கடற்கரை சாலையிலுள்ள நெம்மேலியில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்தினை நிறுவ திட்டமிடப்பட்டது. தமிழக அரசு ரூ.1,259.38 கோடி திட்ட மதிப்பிற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. அம்ரூத் திட்டம் மற்றும் ஜெர்மானிய வளர்ச்சி வங்கி (Kfw) நிதி உதவியுடன் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையகட்டுமான பணி ரூ.991.40 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது. இதில் 20 வருட இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிக்கான தொகை ரூ.697.95 கோடி ஆகும். கடல் நீரை குடிநீராக்கும் நிலையத்திலிருந்து, பல்லாவரம் வரை பிரதான குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் ரூ.281.00 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றன. இதில் 20 ஆண்டுகள் இயக்கி பராமரிக்கும் பணிக்கான தொகை ரூ.74.90 கோடி ஆகும்.

பணிகள் அனைத்தும் முழுமையாக ஏப்ரல் 2023ல் முடிக்கப்பட்டு, சென்னை பெருநகர் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். இத்திட்டத்தினால் தென்சென்னை பகுதிகளான வேளச்சேரி, ஆலந்தூர், புனித தோமையார் மலை, மேடவாக்கம், கோவிலம்பாக்கம், நன்மங்கலம், கீழ்கட்டளை, மூவரசன்பேட்டை, சோழிங்கநல்லூர், உள்ளகரம்–புழுதிவாக்கம், மடிப்பாக்கம் மற்றும் தகவல் தொழில் நுட்ப வழித்தடப் பகுதிகளில் உள்ள தோராயமாக 9 இலட்சம் மக்கள் பயனடைவர்.

(ii) பேரூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம்

சென்னை பெருநகரின் தற்போதைய குடிநீர் தேவை நாளொன்றுக்கு 1400 மில்லியன் லிட்டர் ஆகும். பற்றாக்குறை நாளொன்றுக்கு 486 மில்லியன் லிட்டர். இந்த இடைவெளியை நிறைவு செய்வதற்காக சென்னை நகருக்கு புதிய கூடுதல் குடிநீர் ஆதாரங்களை கண்டறிதல் மிக முக்கியமாகும்.

எனவே, சென்னை கிழக்கு கடற்கரை சாலையிலுள்ள பேரூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் நிலையத்தினை நிறுவதிட்டமிடப்பட்டது. இத்திட்டத்திற்கு தமிழக அரசு ரூ.6,078.40 கோடி மதிப்பிற்கு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை, தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் மற்றும் மாநில அரசின் நிதி உதவியுடன் இந்நிலையம் அமைக்கப்பட உள்ளது. இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ள நிலையில் உள்ளது (bidding stage). இத்திட்டப்பணிகளை விரைவில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் பெறப்படும் குடிநீர் மூலம் சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள தாம்பரம், பல்லாவரம், மாடம்பாக்கம், செம்பாக்கம், சிட்லபாக்கம், பீர்க்கன்காரணை, பெருங்களத்தூர், திருநீர்மலை, குன்றத்தூர், காட்டாங்கொளத்தூர் மற்றும் மாங்காடு ஆகிய பகுதிகளில் வசிக்கும் சுமார் 23 இலட்சம் மக்கள் பயனடைவர்.

### (iii) புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் குடிநீர் வழங்கல் பணிகள்

கீழ்கண்ட 18 பகுதிகளில் ரூ.460.56 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

| பகுதிகள் | எதிர்பார்க்கப்படும் பணி முடிவுறும் மாதம் |
|---|---|
| சூரப்பட்டு, கதிர்வேடு, புத்தகரம் மற்றும் புழல் | மே 2022 |
| இடையான் சாவடி, சடையான் குப்பம், கடப்பாக்கம், மாத்தூர், ஜல்லடம்பேட்டை மற்றும் நெற்குன்றம் | மே 2022 |
| மாதவரம், ராமாபுரம், மணப்பாக்கம், ஒக்கியம்–துரைப்பாக்கம், மணலி, சின்னசேக்காடு, மடிப்பாக்கம் மற்றும் உத்தண்டி | ஜூன் 2022 |

### (iv) வளசரவாக்கம் குடிநீர் மேம்பாட்டு பணிகள்

வளசரவாக்கத்திலுள்ள வார்டு எண் 149 மற்றும் 152 ஆகிய பகுதிகளில் அளவு மானி பொருத்தப்பட்ட பகுதிகள் அடிப்படையில் 24 மணி நேரமும் குடிநீர் விநியோகத்தை உறுதிபடுத்த, ரூ.69.64 கோடி மதிப்பிலான குடிநீர் மேம்பாட்டு

பணிகள் முன்னோடித் திட்டமாக மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் மே 2022ல் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### (v) நீர் இழப்பை குறைப்பதற்காக தற்போது உள்ள குடிநீர் விநியோக அமைப்பை மேம்படுத்துதல்

சென்னைப் பெருநகரின் பிரதானப் பகுதியில் பதிக்கப்பட்டுள்ள பெரும்பான்மையான குடிநீர் விநியோகக் குழாய்கள், 30 ஆண்டுகள் பழமையானவை. எனவே, பிரதான சென்னைப் பெருநகரின் தற்போதுள்ள குடிநீர் விநியோக அமைப்புகளை மேம்படுத்தி, சீரான குடிநீர் விநியோகம் வழங்குவதை உறுதி செய்வதற்காக, 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக, திட்ட மேலாண்மை ஆலோசகரால், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் கீழ் சென்னையின் பிரதானப் பகுதியில் பழுதடைந்துள்ள பழைய குழாய்களை மாற்றியமைத்தல், விடுபட்ட தெருக்களுக்கு குழாய் பதித்தல், குடிநீர் விநியோக அமைப்பின் நீர் அழுத்தத்தை வலுவூட்டல், கீழ்நிலை நீர்தேக்கம் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கம் மூலம் நீர் சேமிப்பை அதிகரித்தல், அளவுமானிகள் பொருத்தப்பட்ட பகுதிகளை உருவாக்குதல், வீட்டு இணைப்பு/அளவுமானி பொருத்துதல் ஆகியவை மேற்கொள்ளப்படும்.

### (vi) இணைக்கப்பட்ட பகுதிகளில் நிறைவேற்றப்படவுள்ள குடிநீர் வழங்கல் பணிகள்

நீலாங்கரை மற்றும் செம்மஞ்சேரி பகுதிகளுக்கு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. அதற்கான நிதி கட்டமைப்பு செய்த பின் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### (vii) கழிவுநீர் மேலாண்மை

சென்னை நகரின் கழிவுநீரை சேகரித்து, சுத்திகரித்து, பாதுகாப்பான முறையில் வெளியேற்றுவது சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மற்றுமொரு முக்கிய கடமை ஆகும். பிரதான சென்னை நகரின் கழிவு நீர் கட்டமைப்பானது முதன் முதலாக 1917ல் நிறுவப்பட்டது மற்றும் சென்னை நகரின் கழிவு நீர் கட்டமைப்பானது 5 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலமும் தனிப்பட்ட கழிவு நீர் சேகரிப்பு அமைப்புகள், கழிவு நீரை கொண்டு செல்லும் அமைப்பு, சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றும் வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. சேகரமாகும் கழிவு நீர் 4,093 கிலோமீட்டர் நீளம் உள்ள கழிவுநீர் சேகரிப்பு குழாய்கள் வாயிலாக 302 கழிவு நீரிறைக்கும் நிலையங்களுக்கு அனுப்பப்படுகிறது. இந்த கழிவு நீரிறைக்கும் நிலையங்களிலிருந்து, கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அனுப்பி சுத்திகரிக்கப்பட்டு, பாதுகாப்பாக வெளியேற்றப்படுகிறது.

### (அ) கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

மாநகரில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் தற்போதைய சுத்திகரிப்பு திறன் நாளொன்றுக்கு 745 மில்லியன் லிட்டர்; கீழ்க்கண்ட அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளது.

| கழிவுநீர் மண்டலம் | கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் | சுத்திகரிப்பு திறன் (MLD) |
|---|---|---|
| I & II | கொடுங்கையூர் (80+80+110) | 270 |
| III | கோயம்பேடு (34+60+120) | 214 |
| IV | நெசப்பாக்கம் (54+40+23) | 117 |
| V | பெருங்குடி (60+54+12) | 126 |
| V | சோழிங்கநல்லூர் – I | 18 |
| | மொத்தம் | 745 |

### (ஆ) கழிவுநீர் கட்டமைப்பின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு

மனித கழிவுகளை மனிதனே அகற்றும் அவல நிலையினை தவிர்க்க, வாரியம் சென்னைப் பெருநகரில் உள்ள கழிவுநீர் அகற்றும் கட்டமைப்பை பராமரிக்கும் பணிகளை இயந்திரமயமாக்கியுள்ளது. கழிவுநீர் குழாய்களில் உள்ள அடைப்புகளை நீக்குவதற்கு ஜெட்ராடிங் இயந்திரங்களும், பராமரிப்பு நுழை வாயில்களில் உள்ள கசடுகளை அகற்றுவதற்கு அதிவேக உறிஞ்சும் மற்றும் தூர்வாரும் இயந்திரங்களும் உபயோகிக்கப்படுகின்றன. தற்சமயம், கழிவுநீர் கட்டமைப்பின் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 454 இயந்திரங்கள் அட்டவணையில் உள்ளவாறு பயன்பாட்டில் உள்ளன.

| வ. எண். | இயந்திரங்களின் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தூர் வாரும் இயந்திரங்கள் | 258 |
| 2 | ஜெட்ராடிங் இயந்திரங்கள் (2KL, 6 KL & 9 KL) | 114 |
| 3 | ஜெட்டிங் மற்றும் உறிஞ்சும் இயந்திரங்கள் | 28 |
| 4 | அதிவேக உறிஞ்சும் இயந்திரங்கள் | 54 |
| | மொத்தம் | 454 |

ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாக இயந்திரங்கள் மற்றும் கருவிகள் தேவைக்கேற்ப கொள்முதல் செய்யப்பட்டு, கழிவுநீர் கட்டமைப்பு எவ்வித தடையுமின்றி பராமரிக்கப்பட்டு வருகிறது.

### (இ) கழிவுநீர் திட்டங்கள்

#### i) இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் நடைபெற்று வரும் கழிவு நீர் திட்டப்பணிகள்

கீழ்க்கண்ட 8 பகுதிகளில் ரூ.525.77 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

| பகுதிகள் | எதிர்பார்க்கப்படும் பணி முடிவுறும் மாதம் |
|---|---|
| நெற்குன்றம் | ஜுன் 2022 |
| பள்ளிக்கரணை, ராமாபுரம், மணலி, சின்னசேக்காடு, மணப்பாக்கம், காரம்பாக்கம், முகலிவாக்கம் | நவம்பர் 2022 |

#### (ii) புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல் மற்றும் பழைய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை புனரமைத்தல் / மேம்படுத்தும் பணிகள்

சுற்று சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் 24.11.2015ல் வெளியிட்ட அறிவிக்கையின்படி, மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து வெளியேற்றப்படும் இரண்டாம் நிலை சுத்திகரிக்கபட்ட கழிவுநீரின் தரத்தின் அளவுகளை மாற்றி அமைத்துள்ளது. திருத்திய தர அளவுகளை அடைவதற்காக சென்னைக் குடிநீர் வாரியம், கொடுங்கையூர்–1, கொடுங்கையூர்–2, பெருங்குடி மற்றும் நெசப்பாக்கம் ஆகிய இடங்களில் 4 புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல் மற்றும் ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை புனரமைத்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகளை ரூ.811.40 கோடி திட்ட மதிப்பீட்டில் அட்டவணையில் உள்ளவாறு மேற்கொண்டுள்ளது.

| புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல் | | செயல்பாட்டில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை மேம்படுத்தும் பணிகள் | |
|---|---|---|---|
| இடங்கள் | சுத்திகரிப்பு திறன் (MLD) | இடங்கள் | சுத்திகரிப்பு திறன் (MLD) |
| கொடுங்கையூர் மண்டலம் I | 120 | கொடுங்கையூர் | 110 |
| கொடுங்கையூர் மண்டலம் II | 120 | கோயம்பேடு | 120+60 |
| நெசப்பாக்கம் | 50 | நெசப்பாக்கம் | 40+54 |
| பெருங்குடி | 60 | பெருங்குடி | 60+54 |
| மொத்தம் | 350 | மொத்தம் | 498 |

### (iii) சோழிங்கநல்லூரில் 54 MLD சுத்திகரிப்பு திறன் கொண்ட கூடுதல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்

தென் சென்னை பகுதிகளான, கிழக்கு கடற்கரை சாலை மற்றும் பழைய மகாபலிபுர சாலை பகுதிகளில் உருவாகும் கழிவுநீரை சுத்திகரிப்பதற்காக, ரூ.72.54 கோடி மதிப்பீட்டில், நாள் ஒன்றிற்கு 54 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட தொடர் உலை தொழில்நுட்பத்தில் (SBR Technology) இயங்கும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் சோழிங்கநல்லூரில் அமைக்கப்பட்டு வருகிறது. இதில் நாள் ஒன்றிற்கு 36 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட சுத்திகரிப்பு நிலையத்தில், மின் உற்பத்தி செய்யும் வசதியுடன் பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகள் அனைத்தும் மே 2022ல் முடிவுறும்.

### (iv) நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

சென்னையின் நீர் வழித்தடங்களில் கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்காக சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை (CRRT) மேற்கொண்டுள்ள பணிகளின் ஒரு பகுதியாக, சேத்துப்பட்டு (1 MLD), சூளைமேடு (1.2 MLD), தாடண்டர் நகர் (4 MLD) மற்றும் கோட்டூர்புரம் (0.6 MLD) ஆகிய இடங்களில் நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன.

புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் நவீன சுத்திகரிப்பு நிலையப் பணிகள் முடிவடைந்து இயக்கத்திற்கு கொண்டு வரப்பட்டபின் கொடுங்கையூரில் உள்ள மிகவும் பழமையான, செயல் திறனை இழந்த 2 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் (80 + 80 MLD) பயன்பாடு நிறுத்தப்படும். இத்திட்டங்கள் மூலம் மொத்த கழிவுநீர் சுத்திகரிப்புத்திறன் நாளொன்றுக்கு 1,057 மில்லியன் லிட்டராக இருக்கும்.

### (v) இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் நிறைவேற்றப்படவுள்ள கழிவு நீர் திட்டப்பணிகள்

ஈஞ்சம்பாக்கம், கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை மற்றும் ஒக்கியம்–துரைப்பாக்கம் ஆகிய 5 பகுதிகளுக்கு ரூ.750.00 கோடி மதிப்பீட்டில் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. ஜல்லடம்பேட்டை, நந்தம்பாக்கம், மடிப்பாக்கம், புழல், மாத்தூர், தீயம்பாக்கம், வடபெரும்பாக்கம், செம்மஞ்சேரி, உத்தண்டி ஆகிய 9 பகுதிகள் மற்றும் மாதவரம் பகுதியில் விடுபட்ட தெருக்களுக்கு பாதாளசாக்கடைத் திட்டப் பணிகளுக்கான திட்ட மதிப்பீடு ரூ.1,306.00 கோடிக்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இடையான்சாவடி, சடையான்குப்பம் மற்றும் கடப்பாக்கம் ஆகிய பகுதிகளுக்கு திட்ட

அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. அதற்கான நிதி உதவி பெற்றபின் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### (vi) சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை மூலம் மேற்கொண்டுள்ள சிறப்பு பணிகள்

தமிழ்நாடு அரசு, நதிகள் மற்றும் நீர்நிலைகளின் சுற்று சூழல்களை மேம்படுத்தும் பணிகளை சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை மூலம் மேற்கொண்டுள்ளது. சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையுடன், சென்னைக் குடிநீர் வாரியம் இணைந்து கூவம் மற்றும் அடையாறு ஆறுகள் மற்றும் பக்கிங்காம் கால்வாய் மற்றும் பிற சிறு கால்வாய்களின் சுற்றுச் சூழலை மேம்படுத்தும் விதமாக கழிவுநீர் கலப்பதை தடுக்க தேவையான திட்டங்களை தயாரித்து செயல்படுத்தி வருகிறது. கூவம் மற்றும் அடையாறு நதிகளின் சுற்றுச் சூழலை மேம்படுத்துவதற்காக சென்னைக் குடிநீர் வாரியம் முறையே ரூ.186.19 கோடி மற்றும் ரூ.123.19 கோடி மதிப்பில் திட்டப் பணிகளை மேற்கொண்டுள்ளது.

தற்போது தமிழக அரசு சென்னை மாநகரின் நீர் வழித்தடங்களை பாதுகாப்பதற்கு முன்னுரிமை அளித்துள்ளது. அதன்படி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், கூவம் மற்றும் அடையாறு ஆறுகள் மற்றும் பக்கிங்காம் கால்வாய் வடிநில பகுதிகளில் உள்ள பிரதான நீரோடைகளில் கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்கான திட்டங்களை மேற்கொண்டுள்ளது. மேலும், நேரடியாகக் கலக்கும் கழிவுநீரைத் தடுத்தல், இடைமறித்து மற்றும் மாற்று வழிகளை அமைத்தல், கழிவுநீர் குழாய்கள்/கழிவுநீர் உந்து நிலையங்கள் புதுப்பித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இதற்கு அரசு கொள்கை அளவில் ரூ.2,371.00 கோடி ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான முதற்கட்ட திட்டப்பணிகளை உடனடியாக செயல்படுத்த ரூ.1,001.00 கோடி நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. ரூ.342.49 கோடி மதிப்பீட்டிலான 34 பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது நடைபெற்று வரும் பணிகளை முன்னதாகவே முடிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் மற்றும் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிகள் துவங்கத் தேவையான நிதி ஒதுக்கப்படாததால் தாமதமாகின. தற்போது அப்பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

## 3. மறுசுழற்சி மற்றும் மறு உபயோகம்

மத்திய பொது சுகாதார சுற்றுச்சூழல் பொறியியல் நிறுவனத்தின் (CPHEEO) முறைமையின்படி, 10 சதவீதம் மறுசுழற்சி நீரை பயன்படுத்த வேண்டும். சென்னை பெருநகரம் மறுசுழற்சி நீரை பயன்படுத்துவதில் முன்மாதிரியாக திகழ்கிறது. நீர்

சேமிப்பின் முயற்சியாக நாளொன்றிற்கு 23 மில்லியன் லிட்டர் இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் மணலியிலுள்ள தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரானது, எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் மீண்டும் சுத்திகரிக்கப்பட்டு, பெறப்படும் நீரானது, தொழிற்சாலை பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தப்படுகிறது. மேலும், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியமானது தொழிற்சாலை பயன்பாட்டிற்கான நீரினை உற்பத்தி செய்வதற்காக 2 எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் சுத்திகரிப்பு நிலையங்களை அமைத்துள்ளது.

### (அ) எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையங்கள்

சென்னை குடிநீர் வாரியத்தால் கோயம்பேடு மற்றும் கொடுங்கையூரில் நிறுவப்பட்ட நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட இரண்டு எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் (TTRO) மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து தொழிற்சாலைகளுக்கு நீர் வழங்கப்பட்டு வருகிறது. எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு தொழில் நுட்பம் மூலம் பயன்படுத்தப்பட்ட நீரை மறுசுழற்சி செய்து மீண்டும் உபயோகப்படுத்துவதால், தொழிற்சாலைகளுக்கு தடையின்றி நீர் வழங்குதல் உறுதி செய்யப்படுகிறது. இதனால் தொழிற்சாலைகளுக்கு நிலையான நீர் வழங்குதல் உறுதி செய்யப்படுவது மட்டுமல்லாமல், அவற்றிற்கு வழங்கப்படும் நன்னீர் தேவை குறைந்துள்ளது. மொத்தமாக, தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் 90 MLD நன்னீர் சேமிக்கப்படுவதால், தேவை – பற்றாக்குறை இடைவெளி குறைக்கப்படுகிறது.

பயன்படுத்தப்பட்ட நீரின் மறுசுழற்சி, நீர் வளப் பெருக்கம் மற்றும் நிதி சேமிப்பை உறுதி செய்கிறது. மேலும், இது நீரின் மறு சுழற்சி பயன்பாட்டினால் ஏற்படும் பொருளாதார உருவாக்கம் மற்றும் முன்னேற்றத்தை விளக்கும் ஓர் உன்னதமான தலையீடு ஆகும். சென்னை பெருநகர் தற்போது 20 சதவீதம் மறுசுழற்சி நீரினைப் பயன்படுத்துவதால், உபயோகப்படுத்தப்பட்ட நீர் மறுசுழற்சியில், இந்தியாவிலேயே முன்னோடிப் பெருநகரமாக திகழ்கிறது.

### (ஆ) மூன்றாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

சென்னை நகரின் குடிநீர் தேவையை நிலையான ஆதாரங்கள் மூலம் நிறைவு செய்யும் விதமாக நாளொன்றுக்கு 10 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கும் திறன் கொண்ட 3 மூன்றாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (TTUF) அமைக்கும்

பணி பெருங்குடி, நெசப்பாக்கம் மற்றும் லாங்ஸ் கார்டன் ஆகிய பகுதிகளில் நடைபெற்று வருகின்றன. இந்நிலையங்களிலிருந்து பெறப்படும் நீர், போரூர் மற்றும் பெருங்குடி ஏரிகளின் சேமிப்பிற்கு துணையாக பயன்படுத்தப்படும். மேலும், லாங்ஸ் கார்டன் மூன்றாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பெறப்படும் சுத்திகரிக்கப்பட்ட நீரானது, பெருநகர சென்னை மாநகராட்சியால் தோட்ட பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தப்படும்.

நாளொன்றுக்கு 260 மில்லியன் லிட்டர் கழிவுநீரை மறு சுழற்சி செய்து, சென்னை மற்றும் சுற்றியுள்ள ஏரிகளை மீள் நிரப்ப விரிவான திட்ட அறிக்கை இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (IIT) மற்றும் ஒன்றிய அறிவியல் மற்றும் தொழில் நுட்ப துறையுடன் (DST–GoI) இணைந்து தயாரிக்கப்பட்டு வருகிறது. முதல் நிலையாக பெருங்குடி மற்றும் நெசப்பாக்கம் நிலையங்களுக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், அருகாமையிலுள்ள நகர மயமாக்கப்பட்ட ஏரிகளை மூன்றாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட நீரைக்கொண்டு மீள் நிரப்ப பயன்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கையும் தயாரிக்கப்பட்டுள்ளது.

### (இ) தொழில் நுட்ப பயன்பாடு – புவியியல் தகவல் அமைப்பு (GIS)

சென்னை குடிநீர் வாரியத்தின் அனைத்து உட்கட்டமைப்புகள் மற்றும் சொத்துக்களின் புவிசார் வரைபடத்தை, புவிசார் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, தயாரிக்கும் பணி தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் (TNUIFSL) அமர்த்திய கலந்தாலோசகர் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இப்பணி தமிழ்நாடு நகர்ப்புர முதன்மை முதலீட்டுத் திட்டத்தின் (TNUFIP) கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) நிதிகொண்டு மேற்கொள்ளப்படுகிறது.

இதன் மூலம் நிலத்திற்கு அடியிலும், நிலத்தின் மேற்பரப்பிலும் உள்ள வாரியத்தின் அனைத்து உட்கட்டமைப்புகள் மற்றும் சொத்துகள் ஆகியவை புவியியல் தகவல் அமைப்புத்தளத்தில் வரைபடமாக்கப்படும். இப்பணி, உள்கட்டமைப்புகளின் சிறந்த பராமரிப்பிற்கும், அவற்றின் மேலாண்மைக்கும் உதவும். இவற்றின் வாயிலாக சென்னைப் பெருநகர மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கிட முடியும். மேலும், இப்பணியில் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய பொறியாளர்களுக்கு புவியியல் தகவல் அமைப்புதளத்தின் மூலம் கட்டமைப்புகளை பராமரிக்க பயிற்சியளிக்கப்பட உள்ளது.

### (ஈ) புவியிடங்காட்டி (GPS) மூலம் குடிநீர் ஊர்திகளை கண்காணித்தல்

குடிசைப் பகுதிகள், குடிநீர் குழாய் இல்லாத தெருக்கள் மற்றும் குறைவான நீர் அழுத்தமுள்ள தெருக்கள் ஆகிய பகுதிகளுக்கு சரிவிகிதத்தில் வழக்கமான குடிநீர் வழங்கலை உறுதி செய்யும் வகையில் வாடகைக்கு அமர்த்தப்பட்ட லாரிகள் மூலம்

வாரியம் குடிநீர் வழங்கி வருகிறது. நாளொன்றுக்கு சராசரியாக 3,800 லாரி நடைகள் மூலம் 30 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீரை, தடம் மாற்றுதல் மற்றும் குடிநீர் வீணாவதைத் தடுத்தல் மற்றும் சரியான நேரத்தில் குடிநீர் வழங்கல் போன்றவற்றை உறுதி செய்ய அனைத்து லாரிகளிலும் புவியிடங்காட்டும் கருவி பொருத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

### (உ) நிகழ்நிலை (Online) சேவைகள்

நுகர்வோர் www.chennaimetrowater.tn.gov.in என்ற சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் இணையதளம் மூலம் கீழ்கண்ட நிகழ்நிலை சேவைகளைப் பெறலாம்.

1. பொது மக்களின் குறைகளைப் பெற்று நிவர்த்தி செய்தல்.
2. குடிநீர் வரி மற்றும் குடிநீர்/கழிவுநீர் கட்டணங்கள் செலுத்துதல்.
3. குடியிருப்புக்கான புதிய குடிநீர்/கழிவுநீர் இணைப்பு (தரை தளம் + 2 மாடி வரை)
4. தொழிற்சாலைகளுக்கான புதிய குடிநீர் இணைப்பு.
5. அழைத்தால் இணைப்புத் திட்டம் (கழிவுநீர் இணைப்புக்கு) பதிவு செய்தல் (தரை தளம் + 2 மாடி வரை)
6. குடிநீர் ஊர்திக்கு பதிவு செய்தல்
7. கழிவுநீர் அகற்றும் ஊர்திக்கு பதிவு செய்தல்
8. நிலத்தடி நீர் உரிமம் பெறுதல்.

### (ஊ) 24 மணி நேர குறைகள் களையும் மையம்

சென்னை குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில், 24 மணி நேர குறைகள் களையும் பிரிவு, வாரத்தின் எல்லா நாட்களிலும் புகார்களை பெறவும், பதிவு செய்யவும் மற்றும் கண்காணிப்பதற்காகவும் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தில் நுகர்வோர், தங்களது புகார்களையும்/குறைகளையும் நேரடியாகவோ அல்லது தொலைபேசி எண் 4567 4567 (20 இணைப்புகள்) மூலமாகவோ பதிவு செய்யலாம். பதிவு செய்யப்பட்ட புகார்கள்/குறைகள் சம்பந்தப்பட்ட பணிமனைப் பொறியாளர்களுக்கு தாமதமின்றி இணையதளம் மற்றும் குறுந்தகவல் சேவை மூலம் அனுப்பப்பட்டு உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

### (எ) பணியாளர்களின் நலன்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் தனது சேவையை, கட்டமைக்கப்பட்ட நிர்வாக அமைப்பு மற்றும் பணியாளர்களின் பங்களிப்பு மூலம் செயல்படுத்தி வருகிறது. பணியாளர்களின் சேவைத் திறனை பெரும்

மூலதனமாக வாரியம் கருதுவதால், அவர்களின் நலனுக்கு முன்னுரிமை அளிக்கிறது.

இதற்கென, களப்பணியாளர்களின் சுகாதார நலனை மேம்படுத்த, தையற் கட்டணத்துடன் சீருடைகள், எண்ணெய், சோப்பு, மழை மேலங்கிகள், காலணிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் சென்னைக் குடிநீர் வாரியத்தால் வழங்கப்படுகின்றன.

மேலும், நுகர்வோரின் தேவையைப் பூர்த்தி செய்யும் பணியாளர்களின் திறனை மேம்படுத்த கீழ்க்காணும் சேவைகளும் வாரியப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

- பணியாளர்களின் உடல் நலத்தைப் பாதுகாக்க, முழு நேரப் பணியில் இருக்கும் மருத்துவர், மருந்தாளுநர் மற்றும் ஆய்வக தொழில்நுட்ப உதவியாளர் அடங்கிய முதலுதவி அத்தியாவசிய உபகரணங்களுடன் உள்ள மருந்தகம் சென்னைக் குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் இயங்கி வருகிறது.
- அனைத்து பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் நலன் கருதி கண், காது, நுரையீரல், இதயம் போன்ற உறுப்புகளுக்கான சிறப்பு மருத்துவ சிகிச்சைக்கான பரிசோதனைகளுக்காக அவ்வப்போது மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன.
- தகுதியுள்ள பணியாளர்களுக்கு விதிகளின்படி விண்ணப்பிக்கப்படும் அனைத்து விதமான முன் கடன்களும் எவ்வித தாமதமுமின்றி வழங்கப்படுகின்றன.
- அரசு விதிகளின்படி, வாரியத்தில் பணிபுரியும் அனைத்து மாற்றுதிறனாளி ஊழியர்களுக்கும் வாகன சிறப்புப்படி வழங்கப்படுகிறது.
- ஒவ்வொரு மாத இறுதியிலும் பணி ஓய்வு பெறும் ஊழியர்களுக்கு அன்றைய தினமே ஓய்வூதியப்பலன்கள் வழங்கப்படுகின்றன.
- பணியிலிருக்கும் வாரிய ஊழியர் மரணமடைந்தால், விதிகளின்படி கொடுக்கப்பட வேண்டிய இறுதிச்சடங்கு உதவித்தொகை மற்றும் இறப்புக்கான பணிக்கொடை மற்றும் இதர பணப்பயன்கள் அன்னாரது வாரிசுதாரர் விண்ணப்பித்த உடனேயே வழங்கப்படுகிறது.
- முன்களப் பணியில் ஈடுபடும் அனைத்து பணியாளர்களுக்கும் தேவையான அத்தியாவசிய பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்படுகிறது.

**************

தா.கார்த்திகேயன்
அரசு முதன்மைச் செயலாளர்

## ஐந்தாண்டு நிதி நிலைச் சுருக்கம் – ஒரு கண்ணோட்டம்

(ரூபாய் கோடியில்)

| விவரங்கள் | 2021-22 | 2020-21 | 2019-20 | 2018-19 | 2017-18 |
|---|---|---|---|---|---|
| அ. வருமானம் | | | | | |
| குடிநீர் விற்பனை மற்றும் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி | 801.05 | 713.49 | 663.97 | 816.77 | 480.64 |
| இதர வருவாய் | 413.34 | 398.46 | 413.77 | 256.55 | 407.37 |
| மொத்த வருவாய் | 1,214.39 | 1,111.95 | 1,077.74 | 1,073.32 | 888.01 |
| ஆ. செலவினம் | | | | | |
| சம்பளம் மற்றும் ஊதியம் | 249.98 | 250.58 | 263.61 | 289.93 | 199.51 |
| இயக்குதல் மற்றும் பராமரித்தல் | 702.06 | 670.5 | 719.56 | 610.08 | 555.09 |
| வட்டி | 80.28 | 83. 65 | 91.38 | 10.43 | 72.76 |
| தேய்மானம் | 128.12 | 130.01 | 139.03 | 138.92 | 139.16 |
| இதர செலவினம் | 111.31 | 103.23 | 198.58 | 112.73 | 86.59 |
| மொத்த வருவாய் செலவினங்கள் | 1,271.75 | 1,237.97 | 1,412.16 | 1,162.11 | 1,053.12 |
| வரவை விட செலவு அதிகம் (அ-ஆ) (பற்றாக்குறை) | -57.36 | -126.03 | -334.41 | -88.79 | -165.11 |
| பங்குகள் | 2,425.96 | 2,215.10 | 2,051.30 | 1,906.06 | 1,792.29 |
| அரசு மானியம் | 7,768.57 | 6,621.8 | 5,666.75 | 4,921.00 | 4,480.03 |
| நீண்ட கால கடன்கள் | 1,915.32 | 1,919.88 | 1,912.99 | 1,909.07 | 1,107.70 |
| நிலையான சொத்துக்கள் | 10,219.95 | 9,056.71 | 8,302.99 | 7,611.98 | 7,054.53 |
| தற்போதைய நிகர சொத்துக்கள் | -171.24 | -303.69 | -549.70 | -419.18 | -1,129.10 |
| சேர்ந்துள்ள உபரி / பற்றாக்குறை | -2061.13 | -2003.77 | -1877.74 | -1543.33 | -1454.54 |
| மொத்த பணியாளர்கள் | 2,530 | 2,691 | 2,888 | 2,857 | 2,888 |

## சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் 2021–2022 ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்குகள் சட்டமன்றப் பேரவை முன் வைப்பதில் ஏற்பட்ட காலதாமதத்திற்கு உரிய காரணங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | (அ) | தமிழ்நாடு அரசு நிதித் துறையின் அறிவுரைப்படி நிறுவனங்கள், கணக்குகளை எந்த கால கட்டத்திற்குள் தொகுக்க வேண்டும் | 30.06.2022 |
| | (ஆ) | கணக்குகள் தொகுக்கப்பட்ட தேதி | 06.11.2024 |
| | (இ) | உரிய கால கட்டத்திற்குள் தொகுக்கப் படாவிட்டால் அதற்கான காரணங்கள் | முந்தைய ஆண்டுகளின் கணக்குகளை சட்டமன்றத்தில் சமர்பிப்பதில் தாமதம், 42 உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள் இணைப்பு மற்றும் பயன்ப்பாட்டிலிருந்த யுனிக்ஸ் மென்பொருளிலிருந்து ஆரக்கலுக்கு மாறியது. மேலும் கோவிட்–19 லாக்டவுன் ஆகிய காரணங்களினால் 2021–22 நிதியாண்டிற்கான கணக்குகளை தொகுக்க தாமதம் ஏற்பட்டது. மேலும் 07.03.2022 முதல் 31.03.2022 வரையிலான காலகட்டத்தில் இணைய அடிப்படையிலான அமைப்பிலிருந்து ஆரக்கிள் மென் பொருளுக்கு தரவுகளை மாற்றாமையின் காரணமாக 2021–22 ஆம் நிதியாண்டுக்கான கணக்குகளை முடிப்பதில் தாமதம் ஏற்பட்டது. |
| 2. | (அ) | கணக்குகளை தணிக்கை செய்ய தணிக்கையாளர்கள் எப்பொழுது நியமனம் செய்யப்படவேண்டும் | இந்திய தணிக்கை துறைத் தலைவர் தணிக்கையாளர்களை சிபாரிசு செய்து, அதை அரசு அனுமதி கொடுத்தவுடன். |
| | (ஆ) | நியமனம் செய்யப்பட்ட தேதி | 05.05.2023 |
| | (இ) | உரிய காலத்திற்குள் தணிக்கையாளர் நியமனம் செய்யபடாதற்கான காரணங்கள் | பத்தி எண் 1(இ)ல் குறிப்பிட்டுள்ள காரணங்களால் கணக்குகளை இறுதி செய்வதில் தாமதம் ஏற்பட்டதால், 2021–22 நிதியாண்டிற்கான தணிக்கையாளர் நியமனம் தாமதமானது. |
| 3. | (அ) | தணிக்கையாளர்கள் எந்த தேதியில் தணிக்கையை முடிக்க வேண்டும் | 31.10.2022 |
| | (ஆ) | தணிக்கை முடிந்த தேதி | 06.11.2024 |
| | (இ) | உரிய காலத்திற்குள் தணிக்கை முடிக்கப்படாததற்கான காரணங்கள் | பத்தி எண்.1(இ)ல் குறிப்பிட்டுள்ள காரணங்களால் கணக்குகளை இறுதி செய்வதில் தாமதம் மற்றும் பத்தி 2(இ)ல் கூறப்பட்டுள்ளபடி தணிக்கையாளரை நியமிப்பதில் தாமதம் ஏற்பட்டதால், கணக்குகளின் தணிக்கையை குறித்த நேரத்தில் முடிக்க இயலவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| 4. | (அ) | மாநில கணக்காயர் கருத்துகள் பெறப்பட வேண்டிய தேதி | பொருந்தாது |
| | (ஆ) | கருத்துகள் பெறப்பட்ட தேதி | பொருந்தாது |
| | (இ) | உரிய காலத்திற்குள் முடிக்காததற்கான காரணங்கள் | பொருந்தாது |
| 5. | (அ) | ஆண்டு கணக்குகள் எந்த தேதிக்குள் வாரியக் கூட்டத்தில் வைக்கப்பட வேண்டும் | 30.11.2022 |
| | (ஆ) | எந்த தேதியில் வைக்கப்பட்டன | 08.11.2024 |
| | (இ) | கால தாமதத்திற்கான காரணங்கள் | பத்தி எண் 1(இ), 2(இ) மற்றும் 3(இ)ல் குறிப்பிட்டுள்ள காரணங்களால் கணக்குகளை இறுதி செய்து தணிக்கை செய்வதில் தாமதம் ஏற்பட்டதால் குறிப்பிட்ட நேரத்திற்குள் கணக்குகள் தணிக்கை செய்து வாரிய கூட்டத்தில் சமர்ப்பிக்க இயலவில்லை. |
| 6. | (அ) | அச்சடிக்கப்பட்ட ஆண்டு அறிக்கைகள் பெறப்பட வேண்டிய தேதி | 31.12.2022 |
| | (ஆ) | உரிய காலத்தில் பெறப்படாவிட்டால் அதற்குரிய காரணங்கள் | பத்தி எண் 1(இ), 2(இ), 3(இ) மற்றும் 5(இ)ல் குறிப்பிட்டுள்ள காரணங்களால் கணக்குகளை இறுதி செய்து, தணிக்கை செய்து மற்றும் வாரியக் கூட்டத்தில் சமர்ப்பிக்க தாமதம் ஏற்பட்டதால் ஆண்டு அறிக்கையை அச்சிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. |
| 7. | (அ) | ஆண்டு கணக்குகள் அரசுக்கு அனுப்பப்பட வேண்டிய தேதி | 31.12.2022 |
| | (ஆ) | ஆண்டு கணக்குகள் அரசுக்கு அனுப்பப்பட்ட தேதி | 27.11.2024 |
| | (இ) | உரிய காலத்தில் பெறப்படாவிட்டால் அதற்குரிய காரணங்கள் | -- |
| 8. | (அ) | ஆண்டு அறிக்கையை அரசு பெற்ற தேதி | 28.11.2024 |
| | (ஆ) | ஆய்வு செய்ய எடுத்துக் கொண்ட காலம் | 6 நாட்கள் |
| | (இ) | காலதாமாமிருப்பின் அதற்குரிய காரணங்கள் | -- |
| 9. | (அ) | ஆண்டு அறிக்கை பேரவை முன் வைக்கப்பட வேண்டிய தேதி | 31.03.2023 முன்னால் |
| | (ஆ) | பேரவைச் செயலகத்திருந்து அனுப்பப்பட வேண்டிய தேதி | அடுத்த கூட்டத் தொடருக்கு முன்னால் |

தா.கார்த்திகேயன்
அரசு முதன்மைச் செயலாளர்